மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

2 | 15 - 11 - 53 | இதழ் 14

★

லியாத சிந்தனையால்

டாத முயற்சியால்

விஞ்ஞானி கண்ட வெற்றிகள்

உலகிற்கு தந்த புதுமைகள்

★

ள்நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளி நாடு அணா 5

நிதிப்பையை நிரப்புங்கள்

பண்டைய கிரேக்க நாட்டில் ஸ்பார்ட்டா என்ற நகரிலிருந்தவர்கள், வீரத்துக்கும், எதையும் விரைந்து செயலாற்றும் தன்மைக்கும் பேர்பெற்றவர்கள். அவர்களுடைய அறிவிப்புகளும், பேச்சுகளும் மிகக் குறுகிய அளவில், விளங்கவைப்பதாகவே இருக்கும்.

ஒருசமயம் அவர்களுடைய நாட்டுக்குப் பக்கத்திலிருந்த தீவில் பஞ்சம் ஏற்பட்டது. அதற்காக உதவி வேண்டி, அந்தத் தீவிலிருந்தவர்கள் சில தூதர்களை ஸ்பார்ட்டா நகரத்தாருக்கு அனுப்பினார்கள். வந்த தூதர்கள் ஸ்பார்ட்டா நகரத் தலைவர்களின் முன் பணிக்கணக்கில் தாங்கள் படும் அவதியை விளக்கமாக எடுத்துச் சொன்னார்கள். நீண்டநேரம் கேட்டு முடிந்தபின், ஸ்பார்ட்டா நகரத்தார்கள் தூதர்களைப் பார்த்து, "நீங்கள் பேசியதின் இரண்டாவது பகுதி எங்களுக்குப் புரியவில்லை, முதற் பகுதியை நாங்கள் மறந்துவிட்டோம்" என்று சொல்லி அனுப்பிவிட்டார்கள்.

ஏமாற்றமடைந்த தீவுக்காரர்கள், மீண்டும் ஒரு தூதனைத் தேர்ந்தெடுத்து அனுப்பினார்கள், ஆனால் ஒரு எச்சரிக்கையுடன், வேண்டுகோள் மிகவும் சுருக்கமாக இருக்கவேண்டுமென்று. இரண்டாவது தூதன் ஸ்பார்ட்டா நகரத்தவர்களைச் சந்தித்ததும், ஒன்றும் பேசாமல் தான் கொண்டுவந்த பெரிய மூட்டையை அவிழ்த்து, அதிலிருந்த சாக்குப்பைகளை உதறினான். ஒரு பையைக் கையிலெடுத்து "இது காலியாக இருக்கிறது, நிரப்புங்கள்" என்று சொன்னான். உடனே ஸ்பார்ட்டா நகரத்தார்கள் அந்தப் பைகளிலெல்லாம் தானியத்தைக் கொட்டி நிரப்பிவிட்டார்கள். மிகக் குறுகிய அறிவிப்பால் நாடடைந்த வெற்றிகண்டு தூதன் மகிழ்ந்தான். அப்பொழுதும் ஸ்பார்ட்டா நகரத்தலைவர் அவனை விடவில்லை, விடைபெற்றுக்கொள்ளும்பொழுது அவனைப் பார்த்து "பை காலியாக இருக்கிறது என்று நீ கூறியிருக்கவேண்டியதில்லை. அதை நாங்களே பார்த்துவிட்டோம். பிறகு நிரப்புங்கள் என்று சொல்லியிருக்கவேண்டியதில்லை. காலியாயிருப்பதிலிருந்தே அதை நிரப்பவேண்டுமென்று எங்களுக்குத் தெரியும்" என்று சொன்னாராம்.

நாங்களும் உங்களுக்கு அதிகம் கூறத் தேவையில்லை

தூத்துக்குடிச் சதிவழக்கு

96 கழகத் தோழர்கள்

16 பயங்கரக் குற்றச்சாட்டுகள்

வழக்கு நிதியை நிரப்புங்கள்

பணம் அனுப்பவேண்டிய முகவரி:

அ. பொன்னம்பலனார், 24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

15-11-53 ஞாயிற்றுக்கிழமை

தீராத வழக்கு

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர்கள் ஐவர்மீதும் ஏற்பட்ட வழக்கை ஆச்சாரியார் அரசாங்கம் மீண்டும் கொண்டுவந்துள்ளது. அவர்கள்மீது சாட்டப்பட்ட வழக்கில், அபராதமும், தண்டனையும் தரப்பட்டது. அபராதத்தைக் கட்ட மறுத்து, சிறைவாசமேற்றனர் தலைவர்கள். அந்தத் தண்டனைக் காலமும், முடிவடைந்து அவர்கள் வெளிவருவதற்கு இன்னும் இரண்டு வாரங்கள்தானிருக்கின்றன. அதற்குள் ஆச்சாரியாருக்குக் கிலி பிடித்துவிட்டது. தண்டனையைப் பெருக்கி, அவர்களை நீடித்துச் சிறையிலேயே அடைத்து வைக்க ஆச்சாரியார் பாடுபடுகிறார், சட்ட நாதர்களை யோசனை கேட்கிறார், மேல் நீதி மன்றங்களுக்கு மனுச் செய்கிறார். இந்தச் சட்டதிட்டங்களும், நாட்டிலே தட்டிக்கேட்க மக்களும் இல்லையென்றால், இந்த ஐந்து தலைவர்களையும் தூக்கு மேடைக்கோ, ஆயுள் சிறைக்கோ அனுப்ப ஆச்சாரியார் தயங்கியிருக்கமாட்டார் என்றே தோன்றுகிறது. அவர் பாதுகாக்கிற வர்ணாச்சிரமத்தையும், அவருக்குப் பாதுகாப்புத் தருகிற வடநாட்டு ஏகாதிபத்தியத்தையும் எதிர்த்த 'மாபாவிகள்' அல்லவா, இந்த ஐவரும். எனவேதான் இந்த முனிபுங்கவருக்கு அவ்வளவு கோபமும் ஆத்திரமும் ஏற்பட்டிருக்கிறது.

ஆச்சாரியார் முதல் மந்திரியானதும்—அதாவது முதல் மந்திரி பதவிக்குள் நுழைந்து கொண்டதும்—மக்களின் கஷ்ட நஷ்டங்களைத் தீர்க்க, புதுவழியொன்றைக் கண்டுபிடித்தார். "பட்டினியா?" "பஞ்சமா?" "நோய் நொடியா?", "வேலையில்லாத் திண்டாட்டமா?" எதுவாயிருந்தாலும் சரி, பஜகோவிந்தத்தையே சகலரோக நிவாரணியாக அவர் கைக்கொண்டிருந்தார்.

இவ்வாறு மக்கள் தரும் மனுக்களை, மாதேவனுக்கு அனுப்பிவந்த ஆச்சாரியார், திராவிட முன்னேற்றக் கழகத்தை அடக்க மட்டும், அதன் தலைவர்களுக்குத் தண்டனைகள் தருவதற்குமட்டும், ஆண்டவனிடம் அல்ல, சட்ட மன்றத்தில் மாகாண முதல் நீதியாளரிடம் மனுச் செய்தார். இப்பொழுதும் தண்டனைகள் போதாதென்று முறையிடுகிறார், உயர்நீதி மன்றத்தில். மற்றவர்களுக்குச் செய்த உபதேசத்தை அவரே பின்பற்றவில்லை. இந்த அடாத செயலை ஆண்டவன் ஏற்றுக்கொள்ளமாட்டார் என அவர் நினைத்திருக்கலாம்.

ஐவர்மீதும் தரப்பட்ட அபராதமும், தண்டனைகளும் போதாதென்று ஆச்சாரியார் அரசாங்கம் தொடர்ந்துள்ள வழக்கில் முடிவு எதுவானாலும்—மீண்டும் ஓராண்டோ, இரண்டாண்டோ அவர்கள் சிறையிலே அடைக்கப்பட்டாலும், அதனால் கழகத்தின் வளர்ச்சியோ, நாட்டிலே எழுந்துள்ள உரிமை உணர்ச்சியோ நிச்சயமாகத் தடைப்படாது. சட்ட மன்றத்தில் அரசியல் வழக்குகள் பெருகப் பெருக, தண்டனைகள் தரத்தர, ஆச்சாரியார் அரசாங்கம் தன்மீதே தண்டனைகளைத் தந்துகொள்கிறது.

இந்த மந்திரிசபை அமைந்ததிலிருந்து, இதுவரை எதிர்த்துப்பேச எவருமில்லையென எதேச்சாதிகாரத்துடன் ஆண்ட ஆச்சாரியாரின் ஆட்சிமுறைக்கு முதல் கலகலப்பு—சரிவு ஏற்பட்டது திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது அது மோதியபொழுதுதான். "அரசியல் ஞானி" என்று போற்றப்பட்டவர் "ஆணவக்காரர், எதேச்சாதிகாரப்போக்குடையவர்" என்று அவர் கட்சியினராலேயே தூற்றப்படும் நிலைக்கு அவர் வந்துவிட்டார்.

சட்ட மன்றத்தில் நமது தலைவர்கள்மீது—கழகத்தின்மீது எவ்வளவு வழக்குகள் தொடரப்பட்டபோதிலும், மக்கள் மன்றத்தில் நாம் தொடுத்துள்ள வழக்கு—வர்ணாச்சிரமத்தின் மீது, வடநாட்டு ஆதிபத்தியத்தின்மீது, டாடா-டால்மியா முதலாளித்துவத்தின்மீது தொடுத்துள்ள போராட்டம் தொடர்ந்து நடைபெறுகிறது, நடைபெறும் வெற்றிகாணும் வரை—இன்பத் திராவிடம் அமையும்வரை.

ஆச்சாரியார் ஏலம் போடுகிறார்!

"ஒரு தடவை ஐந்தணா! இரண்டு தடவை ஐந்தணா! மூன்றாவது...பாருங்கள், நன்றாகப் பாருங்கள்!....போனால் வராது! கடைக்குப் போனால் பத்தணாவுக்குக் குறையாது! கடைசித்தடவையாக...யாரும் கேட்கவில்லையா! சரி, மூன்றாவது தடவையாக ஐந்தணா!" என்று மணிதட்டி ஏலம்போடும் நாடோடி வியாபாரிகளை நாம் பார்த்திருக்கிறோம். அவர்களுக்குத் தேவையானதெல்லாம் சிறிது இருட்டிய நேரம், போட்டியுணர்ச்சியும் பையிலே கொஞ்சம் பணமும் உள்ள பத்துப் பதினைந்துபேர், ஒரு காஸ்லைட், ஒரு முச்சந்தி இவைகள் போதும். அழுக்கேறிய கண்ணாடி தம்ளரிலிருந்து, மக்கிப்போன நார்ப்பட்டுச் சேலைவரை அங்கு விலைபோய்விடும். அந்த கைய ஏலக்காரர்கள் வெறும் விலை கூறிடும் வியாபாரிகளாகமட்டுமல்ல, வேடிக்கையாகக் குட்டிக்கதைகள், உபமானங்கள் இவைகள் சொல்லி, கூடியிருப்பவர்களைச் சிரிக்கச்செய்து, பின் தனது வியாபாரத்தை நடத்த முயலுவார்கள். "இந்தப் புடவையைக் கட்டிக்கொண்டு, ஒரு பூவை முடித்து, ஒரு குங்குமப்பொட்டையும் வைத்துவிட்டால், அப்படியே வைகுண்டத்தில் வாசம் செய்கிற சாட்சாத் லட்சுமி மாதிரியே இருக்கும்" என்றுதான் வைத்திருக்கும் கலர்ப்புடவையை எங்கோ இருக்கிற லட்சுமிதேவிக்கு அணிந்து அழகு காட்டுவான். கூடியிருப்பவர்களுடைய விருப்பு வெறுப்புகளைத் தனதாக்கிக்கொண்டு, சரக்கிலே முடுக்கு இல்லாவிட்டாலும், பேச்சிலே தன் காரியத்தைச் சாதித்துக்கொள்ளப் பார்ப்பான்.

நாடோடி வியாபாரிகளென்ன, இப்பொழுது நாட்டிலே அமைந்துள்ள ஆச்சாரியாரின் அரசாங்கம் ஒரு முதல்தர ஏலக்கம்பெனியாகிவிட்டது.

ஏலக்கம்பெனியார் பழைய சாமான்களை, குறைந்த விலைக்கு வந்தால், அவற்றை வாங்கி ஏலத்தில் விற்பார்கள். ஆனால் ஆச்சாரியாரோ எதிர்க்கட்சியினரின் சொத்துக்களை, பலாத்காரமாகப் பறிமுதல் செய்து ஏலத்தில் போடுகிறார். ஆச்சாரியாரின் ஏலவியாபாரம் மிக மும்முரமாக நடைபெறுகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்தினர்மீது பழிவாங்கும் திட்டத்தில், அவர்களது பொருள்களைப் பறிமுதல் செய்து ஏலம்போடுவதை ஒரு பகுதியாக ஆக்கிக்கொண்டுள்ளார்.

முன்பு அறிஞர் அண்ணாமீது "ஆரியமாயை" வழக்கின்போது, அவர் வைத்திருந்த பேப்பர் கட்டுகளைப் பறிமுதல் செய்து ஏலத்தில் விட்டது, காங்கிரஸ் அரசாங்கம். இப்பொழுது ஆச்சாரியாரின் தர்ம ஆட்சியில் இந்த ஏலமிடும் முறை வலுத்துள்ளது.

நேரு பண்டிதர் வீசிய இழிமொழிகளை ஏற்றுக்கொள்ள மறுத்து, வடநாட்டு ஆதிபத்தியத்தை எதிர்த்து, வடநாட்டு முதலாளித்துவத்தை எதிர்த்து, நாட்டு மக்களின் வாழ்வை நலியச்செய்யும் வர்ணாச்சிரமத் திட்டத்தை எதிர்த்துப் போராடிய கழகத் தோழர்களில் பலர் சட்ட மன்றத்தில் குற்றவாளிகளென, அபராதம் விதிக்கப்பட்டனர். அந்த வீரர்கள், அபராதம்கட்ட மறுத்துச்சிறைவாசமேற்றனர்.

அபராதத்தைக் கட்ட மறுத்து, சிறைத் தண்டனையை அனுபவித்துங்கூட ஆச்சாரியார் அரசாங்கம் சும்மா விடவில்லை. பழிவாங்கும் நோக்கத்துடன் — கடைசி அளவு வரை கொடுமை செய்யும் நோக்கத்துடன், அபராதம் கட்ட மறுத்தவர்கள் வீடு புகுந்து, சாமான்கள் கைப்பற்றப்பட்டு, ஏலத்தில் விட்டிருக்கிறது.

ஆச்சாரியார் ஒரு ஏல வியாபாரியாகிவிட்டார்.

ஏலம் போடப்பட்டன கீழ்க்கண்ட ஊர்களில்

அத்தாணியில் : கழகத் தோழரின் சைக்கிள் பறிமுதல் செய்யப்பட்டு ஏலமிடப்பட்டது.

கோவையில் : அபராதங்கட்ட மறுத்துச் சிறைத்தண்டனை ஏற்றவர்களின் வீட்டுச் சாமான்கள் பறிமுதல் செய்யப்பட்டு, ஏலத்தில் கொண்டுவரப்பட்டன.

சேத்தியாதோப்பில் : சிறைப்பட்ட தோழர்களின் மாடுகள் பறிமுதல் செய்யப்பட்டன.

பொள்ளாச்சியில் : வீட்டிலிருந்த தட்டு முட்டுச் சாமான்கள் எடுத்துச்செல்லப்பட்டன, அபராதத் தொகைக்காக.

கடைசியாக திருவாரூரில் கருணாநிதியின் கார் பறிமுதல் செய்யப்பட்டது; முப்பத்தைந்து ரூபாய் அபராதத்துக்காக.

ஆச்சாரியாரின் அரசாங்கம், கழகத் தோழர்களை சிறையிலடைத்துவிட்டது. அவர்களுடைய வீட்டுச் சாமான்களைக் கைப்பற்றி ஏலமிடுகிறது, "முப்பத்தைந்து ரூபாய், நாற்பது ரூபாய்!" என்று.

அரசாங்கம் கைப்பற்றியதே, அந்தப்பொருள்கள் கடனுக்காக எடுக்கப்பட்டவைகளா? களவாடிய பொருள்களா? கொள்ளை லாப நோக்கத்துடன் இருட்டு அறைகளில் பதுக்கப்பட்டிருந்தவையா? அல்லது கதர்ச் சட்டையுடன் கள்ளமார்க்கட்டில் சம்பாதிக்கப்பட்டவைகளா? கிடையவே, கிடையாது.

காங்கிரஸ் ஆட்சியில் நாட்டின் வளமையும், வாழ்க்கை நிலையும் பெருகாவிட்டாலும், ஒன்று மட்டும் அளவுகடந்து பெருகியதே—அது தான் ஊழல்—அத்தகைய ஊழல் மயத்தில் சேர்க்கப்பட்ட பொருள்களா, பொள்ளாச்சியிலும், சேத்தியாதோப்பிலும் பறிமுதல் செய்யப்பட்ட பொருள்கள்?

நாடும், உலகும் கண்டு சிரிக்குமளவுக்கு, "மத்திய அரசாங்கத்து முக்கிய அதிகாரி வாங்கிய லஞ்சங்கள்" என்று சிறிய எவர் சில்வர் கரண்டியிலிருந்து லினன் கோட்டு சட்டை வரை, பக்கம் பக்கமாக லஞ்சப்பொருள்களின் பட்டியல் தரப்பட்டதே, அத்தகைய லஞ்சப் பொருள்களையா அரசாங்கம் கைப்பற்றினார்கள், கோவையிலும், அத்தாணியிலும் வீட்டுச் சாமான்களை எடுத்தபொழுது?

லஞ்சம் வாங்கியதால் உண்டான மாளிகைகள், ஊழல் மயத்தால் உருவான தோட்டங்கள், கொள்ளை லாபத்தால் கட்டப்பட்ட கட்டிடங்கள், கள்ளமார்க்கட் பணத்தால் ஓடுகிற கார்கள், இவைகள் கண்ணெதிரே எண்ணிலடங்காமல் இருக்கும்பொழுது—கொஞ்சம் நஞ்சமல்ல, அரசாங்கக் கணக்குப்படி நானூறு கோடி ரூபாய்க்குமேல் உலவுகின்றன—அவ்வாறு கள்ளத்தனமாக உலவுவதைக் கைப்பற்ற வகையில்லா சர்க்கார்தான், திருச்சி சிறையில் கருணாநிதி வாடும்பொழுது, திருவாரூரில் நிறுத்தப்பட்டிருந்த அவருடைய காரைக் கைப்பற்றியது, ஏலத்திற்குக் கொண்டுவர.

"அபராதம் அல்லது சிறைவாசம்" என்று தண்டிக்கப்பட்டபொழுது, கழகத் தோழர்கள் அபராதம் கட்ட மறுத்துச் சிறைபுகுந்தனர். அபராதத்துக்காகச் சிறைத்தண்டனையை அனுபவித்தபின்கூட, அபராதத்தொகையை வசூலிப்பதில் ஆச்சாரியார் அரசாங்கம் முனைந்திருக்கிறது; மாடுகன்றுகளை, மரச்சாமான்களை, நெல் மூட்டைகளை, சைக்கிளை, காரை பறிமுதல் செய்கிறது, ஏலம்போடுகிறது. ஒரே குற்றச்சாட்டு, அதற்கு இரண்டுமுறை அரசாங்கம் தண்டிக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் எனது முதல் எதிரி, அதை ஒழித்துக்கட்டுவேன் என்று ஆச்சாரியார் எக்காளமிட்டார். கழகத் தோழர்கள் சிறையில் தள்ளப்பட்டனர், தண்டிக்கப்பட்டனர். தண்டனைக்குப் பின்னும் அபராதங்கள் வசூலிக்கப்படுகின்றன. எதிர்க்கட்சியினரின் சொந்தப் பொருள்களை பறிமுதல் செய்து, ஆச்சாரியார் ஏலமிடுகிறார்.

ஏலமிடப்படுவது வெறும் மரச்சாமான்கள், சைகிள், கார் இவைகள் மட்டுமல்ல.

அத்தாணியில் ஏலமிடப்பட்டது சைக்கிள் அல்ல, ஆச்சாரியாரியாரின் ஆட்சிமுறையின் கண்ணியம் ஏலமிடப்பட்டது.

கோவையில் பறிமுதல் செய்யப்பட்டவை மரச்சாமான்களல்ல, ஆச்சாரியாரின் ஆட்சியில் ஜனநாயக உரிமைகள் பறிமுதல் செய்யப்பட்டன.

சேத்தியாதோப்பில் ஏலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டவை மாடுகளல்ல, மாட்டுப் பெட்டியினர் மக்களிடம் தந்த வாக்குறுதிகள் ஏலத்திற்கு கொண்டுவரப்பட்டன.

பொள்ளாச்சியில் பறிமுதல் செய்யப்பட்டவை கழகத் தோழர்களின் வீட்டுச் சாமான்களல்ல, விடுதலை இயக்கத்தினர்—திருப்பூர் குமரனும், தூத்துக்குடி சிதம்பரமும் தந்துவிட்டுப்போன சொத்துக்களை ஆச்சாரியார் ஏலத்துக்கு கொண்டுவந்துள்ளார்.

திருவாரூரில் ஏலத்திற்காக எடுத்துச் செல்லப்பட்டது கருணாநிதியின் காரல்ல, காங்

அட்டைப்பட விளக்கம்

விஞ்ஞான வெற்றிகள்

மனிதனின் சிந்தனைத் திறமையே—எண்ணங்களின் வளர்ச்சியே விஞ்ஞானத்தின் வரலாறாகும். இன்றுள்ள வாழ்க்கை முறைகள் விஞ்ஞானத்தின் துணைகொண்டு வளர்ந்துள்ளன. மனித வாழ்க்கையின் உயர்வு, விஞ்ஞான வளர்ச்சியுடன் இணைந்திருக்கிறது, பிரிக்கமுடியாதவாறு.

விஞ்ஞானத்தின் சாதனைகள் மிகவும் ஆச்சரியமானவை. விஞ்ஞானம் இருண்ட உலகை ஒளிபெறச் செய்தது; காடுகரம்புகளை நாடு நகரங்களாக்கியது; பாழடைந்த வெளிகளில் பயன்தரும் சோலைகள், குப்பை கூளங்களில் ஒளிவிடும் வண்ணங்கள், கல்லிலே கனி, நீரிலே நெருப்பு, சேற்றிலே செந்நெல், மண்ணிலே மணியும் பொன்னும் எல்லாம் உண்டாயின. விஞ்ஞானத்தின்முன் மலையும் படுத்தது, அலைகடலும் அடங்கியது, வானம் தாழ்ந்தது, வாழ்வு உயர்ந்தது.

விஞ்ஞானி நிற்கிறான், அவனைச் சூழ்ந்து. அவன் கண்டுபிடித்தவை—அவன் சிந்தனையில் விளைந்த செல்வப் பயன்கள் காண்கின்றன. மிதந்திடும் கூண்டு, பறந்திடும் விமானம், ஓடிடும் வண்டி, பாடிடும் பெட்டி, பேசிடும் திரை, இருளை விரட்டிடும் விளக்கு, அணி மண்டபங்கள், அழகு மாடங்கள், மண்ணையும், விண்ணையும் அருகே அழைத்திடும் சாதனங்கள் சிறப்புடன் விளங்குகின்றன.

வெளியுலகில் விஞ்ஞானம் அடைந்த வெற்றிகளைவிட, மனிதனுடைய உள்ளத்தில் அடைந்த வெற்றிகள்தான் மிக முக்கியமானவை. சிறந்தவை. இருண்டுகிடந்த உள்ளத்தை ஒளிபெறச்செய்தது, பயம் நிறைந்த உள்ளத்திற்கு நம்பிக்கையைத் தந்தது, மூட நம்பிக்கைகள் பூட்டியிருந்த அடிமைவிலங்குகளை அகற்றியது, மதக்குருவிடம் மண்டியிட்டுக் கிடந்தவனை நிமிர்ந்து நிற்கச்செய்தது, கொடுமையெனும் சிறையிலிருந்து அவனை விடுவித்தது. தாழ்ந்த தலையை நிமிர்த்தியது, நீர் தேய்ந்த கண்களில் ஒளிசேர்த்தது. அவனை வாழத் தூண்டியது, அவன் நன்கு வாழ வகை செய்தது.

ஆனால் விஞ்ஞானத்தின் பயன்கள் நொடிப்பொழுதில், ஒரு மாதா எழுதியதாலோ, ஒரு மகான் வரம் தந்ததாலோ உண்டானதில்லை. அவை யனைத்தும் மனிதனின் தன்னம்பிக்கையால்—மனிதனின் சிந்தனையால்—விஞ்ஞான வளர்ச்சியால்—ஓயாத உழைப்பால்—சலியாத முயற்சியால் உண்டானவைகளாகும். விஞ்ஞானிகள் உண்மைகளைக் கண்டுபிடித்தனர், மிகுந்த உழைப்பினால்; பின் தாம் கண்டுபிடித்த உண்மைகளுக்காக தம் உயிரையும், உடலையும் வைத்து அவர்கள் போராடவேண்டியிருந்தது. மதக்குருமார்களும், மக்களின் உள்ளத்தையும் உடலையும் அடிமைப்படுத்திய மதோன்மத்தர்களும், விளைத்த கொடுமைகளை, வீசிய தடைகளை, காட்டிய சிறைச்சாலைகளை, மூட்டிய நெருப்புக் குண்டங்களை, விஞ்ஞானிகள் ஏற்றுக்கொள்ளவேண்டியிருந்தது.

உலகம் வாழ, உண்மை வளர அந்த விஞ்ஞானிகள் தங்கள் உயிரையும், உடலையும் பலிகொடுத்தனர். அத்தகைய வீரர்கள்—உத்தமர்கள் பட்டியலில் முதலிடம் பெறுகிறவர் ஜியார்டனே புருனே.

கிரஸ் ஆட்சியின் மானம் அங்கே இழுத்துச் செல்லப்பட்டது ஏலத்திற்காக.

நமது கழகத் தோழர்களின் பொருள்களை—மாடு, சாமான், சைக்கிள், கார் இவைகளை ஆச்சாரியார் எடுத்துச் செல்லுகிறார். ஆனால் ஏலத்திற் போவது அவரது ஆட்சியின் மரியாதை, கண்ணியம், மானம், நேர்மை இவைகளாகும். நமது வீட்டிலிருக்கும் மரச்சாமான்களை அகற்றுமுன், அவரது கட்சிக்கிருந்த மானத்தையும் செல்வாக்கையும் அகற்றிவிட்டுதான் ஆச்சாரியார் வந்திருக்கிறார்

அடையார் மாளிகைகளிலும், இராமபுரி அரசர்களிடமும், மாற்றுக்கட்சி மாணிக்கவேலர்களிடமும் காங்கிரசின் பெயர் ஏலத்திற்கு விடப்பட்டபின்னரே—பட்டம், பதவிகள் விலைக்குத் தரப்பட்ட பின்னரே ராஜாஜி மந்திரிசபை அமைந்தது. மக்களிடமிருந்து பெற்ற வாக்குறுதியால் காங்கிரஸ் மந்திரிசபை அமையவில்லை, மந்திரி பதவிகள்—காங்கிரசின் மானம் ஏலமிடப்பட்டதால் ராஜாஜி மந்திரிசபை அமைந்தது. அந்த ஏலக் கம்பெனிதான் இன்று காரையும், நாற்காலிகளையும், சைக்கிளையும், கன்றுகுட்டியையும் ஏலம்போடுகிறது.

ஜியார்டனோ புருனோ

திராட்சைக் கொடிகள் படர்ந்த மலைக் குன்றின் சரிவிலே படுத்துக்கொண்டு, எதிரே காணப்படும் நீலக் கடலினை நோக்கிய வண்ணம், நீடு சிந்தனையில் ஈடுபட்டிருக்கிறான் ஒரு இளைஞன். உலகோர் காணவிரும்பும் எழிற்கூடமாயும், இத்தாலியின் இணையற்ற செல்வமாயும் விளங்கும் நேப்பிள்ஸ், அவன் கண்முன்னே, தன் அழகெல்லாங் காட்டிக்கிடக்கின்றது. வளைகுடா வடிவிலே அமைந்த வனப்பு மிகுந்த கடற்கரை—வண்ணப் பூக்கள் பூத்துக் குலுங்க, செழித்து வளர்ந்திருக்கும் மரம் செடி கொடிகள்—அடுக்கடுக்காய் நீண்டும் வளைந்தும், உயர்ந்தும் தாழ்ந்தும் காணப்படும் மலைகள்—அந்த மலைமுகடுகளிலே தங்கியிருந்து, மேலெழுந்து, வெள்ளிய வானிலே வட்டமிடும் கருமுகில்கள்! இவைகளைக் கண்டு அடிக்கடி மனம் பூரித்துப்போகும் அந்த இளைஞன், அன்று கவலை தோய்ந்த முகத்தோடு காணப்படுகிறான்.

கவலையற்றிருக்கும் இளமைப் பருவத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டிய நெருக்கடி — எந்த வழியில் எதிர்காலத்தை ஈடேற்றுவது என்பதே அவ்விளைஞனுக்கு ஏற்பட்டிருக்கும் கவலை. அவன் மனக்கண்முன் இரண்டு நிலைமைகள் போட்டியிட்டு நிற்கின்றன. எந்த நிலைமையை ஏற்பது என்பதே அவனது கவலை; போர்வாள் ஏந்துவதா? வேதநூல் தாங்குவதா?—வட்டுடை தரிப்பதா? வெள்ளுடை அணிவதா?—போர்க்களம் புகுவதா? மாதாகோயில் நுழைவதா?—போர்வீரனாய் மாறுவதா? பாதிரியாய்ப் போவதா? இரண்டு நிலைமைகளுக்குமுள்ள ஏற்றத்தாழ்வு, நன்மை தீமை, நிறைகுறை ஆகியவைபற்றி நீடு சிந்திக்கிறான். நாடும் அரசும் குழப்பம் நிறைந்தனவாகவும், மாதாகோயில் மடம் அமைதி நிறைந்ததாகவும் அவனுக்குத் தோன்றுகின்றன. கோயில் விடுதியில் நுழைந்தால் அங்கு நூல்கள் இருக்கும்; படிக்க வசதியிருக்கும்; அறிவைப் பெருக்கவும், உண்மை கண்டறியவும் வாய்ப்பு ஏற்படும் என்றெல்லாம் எண்ணமிடுகிறான். மேலும் ஆன்செல்ம் என்ற பாதிரியார் அந்த இளைஞனைக் காணும் போதெல்லாம், அவன் மாதா கோயில் சீடனாக மாறிவிட்டால், வாழ்க்கையின் குறிக்கோளை அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படும் என்று கூறியிருக்கிறார். இவற்றையெல்லாம் சிந்தித்துப் பார்த்து இறுதியில் கோயில் விடுதியில் புகுவது என்ற உறுதியான முடிவுக்கு வந்து, முகமலர்ச்சியோடு எழுகிறான். அவன் கண்கள் ஒளி வீசுகின்றன; அவனது கன்னங்களில் மகிழ்ச்சி விளையாடுகிறது. தான் நுழையப்போகும் புது இடத்தில் கல்வி தனக்குத் தோழமையாக இருக்கும்; உண்மை தனக்கு வழிகாட்டியாக இருக்கும் என்றெல்லாம் எண்ணிப் பெருமிதங் கொண்டவாறே நடக்கிறான். யார் அவன்? அவன்தான் ஜியார்டனோ புருனோ!

புருனோ, நோலா என்ற சிறுநகரிலிருந்த தன் வீடு போய்ச்சேர அன்று சற்று நேரமாகிவிட்டது. புருனோவின் வரவை ஆவலுடன் எதிர்பார்த்திருந்த அவனுடைய தாய் "ஜியார்டனோ! என் கண்ணே இன்று இவ்வளவு நேர

மாகிவிட்டது? நீ நீண்ட நாழிகையாய வரவில்லையே! உன்னுடைய சிற்றப்பா இதுவரையில் உனக்காகக் காத்திருந்துவிட்டு, இப்பொழுதுதான் மிகச் சோர்வோடு சென்றார். நீ இப்பொழுது வளர்ந்தவனாகவும் வலிவுள்ளவனாகவும் ஆன ஒரு இளைஞனாக இருப்பதால், நீ அழுந்திக்கிடக்கும் நூல்களைத் தூக்கி எறிந்துவிட்டு, ஒரு வீர இளைஞனுக்கு அழகான போர்க்கருவிகளைத்தாங்கவேண்டுமென்று அவர் சொல்லிப்போனார்" என்று இளகிய மனதுடன் கூறினாள்.

அதைக்கேட்ட புருனோ, "அம்மா! நான் போர்க்கருவிகளை ஒருநாளும் ஏந்தமாட்டேன்; சோம்பேறிகளாய் இருக்கும் சில சீமான்களின் கட்டளையை ஏற்று, என்னைச் சேர்ந்த மக்களைக் கொள்ளையிடவோ, கொலை செய்யவோ ஒருக்காலும் ஒருப்படேன். நான் மாதாகோவில் மடத்தில் சேர்ந்து, மதச்சீடனாகத் தீர்மானித்துவிட்டேன். ஆன்செல்ம் பாதிரியார் எனக்குக் கல்வி கற்றுக்கொடுக்கவும், பயிற்சி தரவும் இசைந்துள்ளார். நானும் மடத்தின் ஒழுங்கு முறைப்படி நடக்க உறுதிமொழி அளிப்பதாகக் கூறிவிட்டேன். இரும்புக் கவசமும், கத்தியும், கேடயமும் தாங்கிப், போர்க்களம் புகுந்து, யாருக்கும் ஒரு தீங்கும் செய்யாத ஏழை எளியவர்களைக் கொன்று குவிப்பதைவிட, அறிஞர்கள் எழுதிய நூல்களைப் படித்தறிவதும், கற்றுத் தேர்வதும் நல்லதொரு வாழ்க்கை என்றே கருதுகிறேன்"

"என் அருமை கண்ணே! உன் சிற்றப்பா! உன் சிற்றப்பா அல்லவா அழைக்கிறார்!" என்று அஞ்சிய குரலில் தாய் மறுமொழி கூறினாள். புருனோ, தெருவில் திரிவதைவிட, படிப்பதிலே கவலை செலுத்துவதையே அவள் அடிக்கடி அறிந்திருந்தாளாதலின், புருனோவின் சொற்கேட்டு அவள் அதிர்ச்சியடையவில்லை. தந்தையற்ற மகனுக்கு, அவனது சிற்றப்பாவால் என்ன கேடு விளையுமோ என்று எண்ணி ஏங்கினாள் தாய்.

தாயின் நிலைகண்ட புருனோ, "என் சிற்றப்பா அவர் விருப்பப்படி வேண்டுமானால் அவரே சண்டை செய்யட்டும். என்னை வேண்டுமானால் திட்டிவிட்டுப் போகட்டும். அதற்காக நீங்கள் வருந்தவோ சினந்துகொள்ளவோ செய்யாதீர்கள், அம்மா!" என்று சிரித்துக்கொண்டே கூறினான். உடனே தாயைக் கட்டிக்கொண்டு, முத்தமிட்டு அவள் கண்ணீரைத் துடைத்தான். தாயும் மகனின் முடிவுக்கு இசைந்தாள். வருத்தத்தோடு ஆனால் பெருமிதத்தோடு மகனை மடாலயத்திற்கு அனுப்பிவைத்தாள்.

செயின்ட் டாமினிக் மடாலயத்தில் புகுந்ததும் மிக ஆவலோடும், மும்முரத்தோடும் மத நூல்களையும், பிற நூல்களையும் படிக்கத் தொடங்கினான். பாதிரியாராவதற்கான படிப்பைச் சில ஆண்டுகளில் முடித்த பிறகு, மடத்தின் ஒழுங்குமுறைப்படி நடப்பதாக உறுதிமொழி அளித்து, குருமாரின் நீண்ட அங்கியை அணிந்துகொண்டான். புருனோவிடம் அன்பு காட்டி, அவனை ஆதரித்துவந்த ஆன்செல்ம் பாதிரியார், புருனோவின் அறிவின் தெளிவையும், கருத்தாழத்தையும் கண்டு வியந்தார் என்றாலும், அவனுடைய பாதிரிக்குல்லாயின் கீழே இருக்கும் அவனது மூளை வாளாக்கிடக்காது என்றும், அந்த வலிவுள்ள மூளை அவனுக்கே தொல்லை பல விளைவிக்கும் என்றும் எண்ணி அடிக்கடி பெருமூச்செறிந்து வந்தார். புருனோ மதக் கருத்துக்கள் பற்றிப் பல கேள்விகள் கேட்பான்; அவற்றிற்கு அறிவுக்கொத்த விடைகள் வராதவரையில் விடமாட்டான். ரோம் பழகிக் கொடுத்த பழக்கவழக்கங்களையும், மாதாகோயில் கற்றுக்கொடுத்த கொள்கைகளையும் அப்படியே ஏற்றுக்கொள்ள மறுத்து, அவைபற்றியும் கேள்விகள் கேட்கத் தொடங்கினான். பழைய கொள்கைகளையும், உண்மைகளையும் ஐயப்படுவதே 'பாபம்' என்பதை அவன் கடைபிடிக்கவில்லை. அவன் நாளடைவில் "நாஸ்திகன்" என்று கூறப்பட்டு, கொடுமைக்கு ஆளாக்கப்படுவானோ என்பதை நினைத்து, ஆன்செல்ம் பாதிரியார் அவனை அந்த வழியினின்றும் தடுத்து நிறுத்த முயன்றார். மாதா கோவிலையும், மத நூலையும் ஒருவன் ஐயப்படுகிறான் என்றால், அவனுக்கு அக்காலம் கொடுத்த பரிசுகள் சிறைத்தண்டனை, சித்திரவதை, வெட்டி வீழ்த்துதல், வெந்தழலில் பொசுக்குதல் போன்றவைகளாகும். ஆனால், புருனோ தன் போக்கை மாற்றிக்கொள்ளாமலே, அந்தப் போக்கிலே மிக உன்னிப்பாக நின்றான்.

ஆன்செல்ம் பாதிரியார், "என் அருமை மகனே! மகனே! நீ அதிகமாகத் தெரிந்துகொள்ள விரும்புகிறாய். கணக்கு வழக்கற்ற

கேள்விகளைக் கேட்பதும், எழுதிவைக்கப் பட்டவைகளை மீறி நினைப்பதும் தொல்லை தருவனவாகும். வேத நூல்களைப்படி; நீ சொல்லவேண்டிய மந்தரங்களைச் சொல்லு; கோபர்னிக்கஸையும் அவருடைய கனவுகளை யும் ஒதுக்கித்தள்ளு! அசைக்கமுடியாதபடி உலகை ஆண்டவன் நிலைநிறுத்திவைத்திருக்கி ருர் என்பதைப் புனிதவேதம் அழுத்தந்திருத் தமாகச் சொல்லவில்லையா? ஞாயிற்றை அப்ப டியே நிற்கும்படி ஜோஹூவா கட்டளையிட வில்லையா? ஞாயிறு அப்படியே நிற்கிறது என்ருல், அது கோபர்னிக்கஸின் கருத்துப்படி தவறுடையதல்லவா? ஜியார்டனே! என் மைந்தா! நீ மிக்க அக்கறை எடுத்துக்கொள்ளா விட்டால், உன்னுடைய கேள்விகள் உன்னை ஒரு மதவிரோதியாகக் காட்டிவிடும். குற்றங் காணும் குருமார்களின் குழு, நானே உனக்குச் சலுகை காட்டுவதாக எண்ணிவிடும்" என்று புரூனேவிடம் உருக்கமாகக் கூறினர்.

புரூனே அந்தப் பாதிரியாரின் கைகளைப் பிடித்து முத்தமிட்டு, அவர் ஆறுதல் பெறும் வண்ணம் சில சொற்கள் சொல்லுவான். அவன் தன் அறைக்குச் சென்றதும் மேலும் கீழுமாக உலாவுவான்; சிந்திப்பான்; ஆராய்வான்; வியப்படைவான்; வெளியேறிவிட விரும்பு வான். மடத்தின் கடமைகள் அவனைக் கட் டிப் போட்டிருப்பதாகவே எண்ணுவான். வெளியுலகில் நடைபெறும் அறிவுப் போர்களில் கலந்துகொள்ள வேண்டும் என்று ஆவலுறு வான். ஐரோப்பாவின் பல்கலைக் கழகங்களில் பழைய முறைக்கும் புதியமுறைக்கும், பழைய தத்துவத்திற்கும் புதிய தத்துவத்திற்கும் நடை பெறும் போட்டாபோட்டிகளில் தானும் கலந்துகொள்ள வேண்டும் என்ற விருப்பம் அவனது உள்ளத்தைக் கலக்கிக் கொண்டிருந் தது. அந்த இளஞ் சிங்கம் தான் விரும்பியபடி சுற்றித்திரிய முடியாத கூண்டிலே அடைபட் டிருப்பதாகவே எண்ணிற்று!

அந்தக்காலத்தில் அரிஸ்டாட்டிலின் கருத் துக்களே மாதாகோயிலில் போற்றப்பட்டன: ஆனல் புரூனே, அவற்றைவிட பிதகாரஸ், பிளேட்டோ ஆகியோரின் கருத்துக்களையே சிறந்தனவாகப் போற்றினன். இதன் காரண மாக ஆசிரியர்களுக்கும் அவனுக்கும் சச்சரவு மூளும். ஞாயிறே நமது மண்டலத்தின் நடு நிலையாக நிற்கிறது என்றும், உலகமான கோள் (கிரகம்) அதனைச் சுற்றிவருகிறது என்றும் சொல்லிய பிதகாரஸின் கருத்தையே ஜியார் டனே பின்பற்றினன். ஆகையினல் கோபர் னிக்கஸின் கருத்தையும் இயல்பாகவே கடைப் பிடிக்கும் நிலையில் அவன் விளங்கினன். ஆன் செல்ம் பாதிரியாரின் அறிவுரைகள் அவனை எந்தவகையிலும் மாற்றவில்லை. அந்த அன்பு காட்டும் பாதிரியாருக்கு உள்ளபடியே வருத் தம் உண்டாக்கக்கூடாது என்பதுதான் ஜியார் டனேவின் எண்ணம்; ஆனல் அதே நிலையில் உண்மைக்கு மாருகவும் நடக்க அவனுக்கு விருப்பமில்லை.

சில வாரங்கள் கழித்து மடத்திலுள்ள குரு மார்களின் தீய பார்வை புரூனேவின்மீது விழ ஆரம்பித்திருப்பதை, ஆன்செல்ம் பாதிரியார் கண்டுகொண்டார். புரூனே "நோவாவின் படகு" என்ற தலைப்பில் ஒரு சிறு வெளியீடு எழுதி, அதில் மடத்தின் கேடான முறைகளை யும், மடாதிபதிகளின் கோலாகலமான வாழ் வையும், அறியாமைப் போக்கையும் கேலியும் கிண்டலும் செய்திருந்தான். இது மடத்தின் தலைமைக்கு எட்டிற்று "மதவிரோதி" என்ற சொல் அங்கிருந்த பாதிரிமார், குருமார் ஆகி யோர் ஒவ்வொருவரின் வாயிலும் தட்டுப்பட் டது. மடத்தின் தலைமை அதிபதியால் கடுமை யான நடவடிக்கை அந்த 'உதவாக்கரை சீடன்' மீது எடுக்கப்படும் என்று அவர்களால் எதிர் பார்க்கப்பட்டது.

ஒருநாள் பிற்பகல். மடத்தை அடுத்தத் தோட்டத்தின் அருகிலிருந்த திராட்சைக் கொல்லையில் புரூனே படுத்துக்கொண்டிருந் தான். அவ்வேளையில் ஆன்செல்ம் பாதிரியார் அவனை நோக்கி விரைவாகவும் வேதனை கொண்ட முகத்தோடும் வந்தார். புரூனே அவரைக் கண்டு எழுந்து, அவரை எதிர் கொண்டு சென்று, "என்ன நேர்ந்தது?" என்று மெல்ல வினவினன். வேதனையும், வருத்தமும், விரைவும் அவரைத்தாக்க அவர் மூச்சுத் திணறிப்போய் அப்படியே உட்கார்ந்து விட்டார். அவர் பேசும் ஆற்றலைப் பெறும் வரையில், ஜியார்டனே அவரை நோக்கி உற் றுக் கவனித்துக்கொண்டிருந்தான். அவர் தெம்பு பெற்றவுடன், "ஜியார்டனே! என் அருமை மைந்தா! உன்னைச்சுற்றி ஆபத்து நெருங்கிவிட்டது. நீ முட்டாள்தனமாகக் கூறிய உலகம் நகருகிறது என்பதும், இந்த

உலகைத் தவிர் வேறு பல உலகங்கள் நமது தலைகளுக்குமேலே நட்சத்திரங்களுக்கிடையே இருக்கின்றன என்பதும் ஆன கூற்றுக்கள் மடாதிபதியின் காதுக்குப் போய்ச் சேர்ந்து விட்டன. நீ தகராறு வளர்த்துக்கொண்ட ஜெரோம் பாதிரியார் நீ ஒரு மதவிரோதி என்றும், நீ இந்த நாட்டில் இருப்பது மடத்தின் நல்ல பெயருக்கு ஆபத்து விளைப்பது என்றும் மடாதிபதியிடம் கூறிவிட்டார். நீ அரிஸ்டாடில் கருத்துக்களை மறுப்பது பற்றியும், கோபர்னிகஸின் புதிய கருத்துக்களை ஆதரிப்பதுபற்றியும், எல்லாப் பாதிரிமார்கள் முன்னிலையில், உன்னைக் கேள்வி கேட்க மடாதிபதி முடிவு செய்துவிட்டார். நான் மிகவும் அஞ்சுகிறேன்" என்று தழதழத்தக் குரலில் கூறினார்.

அதுகேட்ட புரூனோ உடன் எழுந்திருந்து, "எதற்கும் அஞ்சவேண்டாம்! ஐயா! எனக்காக நீங்கள் அஞ்சவேண்டாம்! ஏனென்றால் நானே எனக்காக அஞ்சுவதில்லை" என்று அழுத்தந் திருத்தமாகவும், தன்னம்பிக்கையோடும், பெருமிதத்தோடும் மறுமொழி பகர்ந்தான்.

"ஆகையினால்தான் நான் அஞ்சுகிறேன், மகனே! ஆண்டவனுக்கு அஞ்சாதவர்களைச் சாத்தான் மிக எளிதாகப் பிடித்தாட்டுவான், உன்னுடைய நோக்குகள் மிக உறுதியுடையனவாக இருக்கின்றன. வெட்டவெளியில் உலகம் சுழல்கின்றது என்ற உன்னுடைய உறுதியான கருத்தை, அதனோடு தொடர்புடைய மற்றக் கருத்துக்களோடு, நீ எடைபோட்டுப் பார்க்கவில்லை. மேலும் அடியும் அற்ற உன்னுடைய அண்டத்தில், நரகம், இறந்துபோனவர்களின் ஆன்மாக்கள், இருட்டில் விலங்கிடப்பட்ட பேய்கள் ஆகிய இவையெல்லாம் எங்கே இருக்கக்கூடும் என்று நம்புகிறாய்?" என்று பாதிரியார் மனவருத்தத்தோடு வினவினார்.

"உண்மைதான்! சாத்தானின் நிலயியலைப் பற்றி நான் என் மூளையைப போட்டுக் குழப்பிக்கொள்வதில்லை. உலகத்திற்குக் கீழே அடிப்பாகம் என்று ஒன்று இல்லைதான். அது ஞாயிற்றைச் சுற்றி எப்பொழுதும் சுழன்றுகொண்டிருக்கிறது என்பதைத்தான் இப்பொழுது அறிகிறோம்" என்று புரூனோ சிரித்துக்கொண்டே பக்குவமாகக் கூறினான்.

இந்தக் கேட்கக்கூடாத சொற்களைக் கேட்டதற்காகப் பாதிரியார் தன்முகத்தின் எதிரே கையினால் சிலுவை போட்டுக்கொண்டார்.

"பேசாதே! பேசாதே! மகனே! நீ எச்சரிக்கையாய் இருக்கவேண்டும். இல்லாவிட்டால், சாத்தானே வந்து உன்னை நரகத்தின் சிறைக்கு இழுத்துச் சென்றுவிடுவான். அங்கிருந்து உன்னால் மீண்டுவர முடியாது. ஆண்டவன் உலகிலிருந்து மேனோக்கி வானுலகம் சென்றான் என்று புனிதவேதம் கூறுகின்றது. நீ கூறுகிறபடி உலகம் சுற்றிக்கொண்டேயிருந்தால், இது எப்படி இயலும்? நீ வேடிக்கையாகச் சொல்வதெல்லாம் மதத்திற்கு மாறுபட்ட முட்டாள்தனங்களாகும். நீ சொல்லுவது உண்மையானால், அன்னை மேரியும், அருமைப் புனிதர்களும் சொல்லியவைகளெல்லாம் நடவாதனவாக அல்லவோ இருக்க வேண்டும்." என்று அந்தக் கிழப்பாதிரியார் கூறிவிட்டு, தன் முகத்தின் எதிரே மீண்டும் ஒருமுறை சிலுவையைப் போட்டுக்கொண்டார்.

பாதிரியாரின் கடைசி வாக்கியத்தைக் கேட்டவுடன் புரூனோவுக்குப் புன்சிரிப்பு தோன்றிற்று! அது மெல்ல அவன் வாயிலே கொப்பளித்தது. அவரிடம் ஏதோ மறுமொழி கூற அவனது உதடுகள் துடித்தன. ஏதோ சொல்ல வாயெடுத்து, அதற்குள் தன்னைத் தானே அடக்கிக்கொண்டு, 'இந்தக் கிழவரின் நம்பிக்கையை எப்படி மாற்றமுடியும்' என்று தனக்குள்ளேயே எண்ணிக்கொண்டு, ஒரு சொல்லும் சொல்லாமல் கடலை நோக்கி ஆழச் சிந்தித்துக்கொண்டு நின்றான்.

"ஜியார்டனோ! நான் சொல்வதைக் கேள். நீ இளைஞனாகவும், வீரனாகவும் இருக்கிறாய்; ஆனால் உன்னுடைய இளமையும், உன்னுடைய வீரமும் நாளைய வாழ்வுக்குப் பயன்படாது. நான் உனக்கு முன்னெச்சரிக்கை செய்வதற்காகத் தண்டனைகள் ஏற்கவேண்டி வரும். ஆனால் உன்னை உன்னுடைய ஆபத்திலிருந்து தடுக்க, எத்தகைய பாடுபட்டேனும் நான் முன்னெச்சரிக்கை செய்தே தீருவேன். உன்னுடைய விடைகளிலிருந்தே உன்னைப் பிடித்து, உனக்கு மதவிரோதி என்று பெயரிட அவர்களெல்லாம் சதிசெய்துகொண்டிருக்கிறார்கள்.'"

(தொடரும்)

ஆஸ்திரேலியா குடியேற்றம்

ஆஸ்திரேலியா—கண்டங்களிலே மிகச் சிறியது, தீவுகளிலே மிகப் பெரியது! சுமார் 350 ஆண்டுகளுக்கு முன்பு உலகோர் அதனை அறிந்ததில்லை; சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்புவரை அதனோடு யாரும் தொடர்பு கொள்ளவில்லை!

இருநூறு ஆண்டுக் காலத்திற்கு முன்பு வெறும் காடு கரம்புகளாகத் திகழ்ந்து, நாகரிக மற்றக் காட்டு மிராண்டிகளை மட்டுமே கொண்டிருந்த ஆஸ்திரேலியா, இன்று நாகரிகம், அரசியல், விவசாயம், பொருள் உற்பத்தி, வாணிகம் ஆகியவைகளில் மேம்பாடுற்ற ஒரு நாடாகக் காட்சியளிக்கிறது.

அது இந்தியா, மலேயா, ஜாவா, சுமத்தரா, சீனு, ஜப்பான் முதலிய நாடுகளுக்கு அண்மையில் உள்ளதாக இருந்த போதிலும், அதனைக் கண்டு பிடிக்கும் வாய்ப்பையோ, அதனைப் பயன் படுத்திக்கொள்ளும் வாய்ப்பையோ இந்த நாடுகள் பெறவில்லை. மேற்கு ஐரோப்பிய நாடுகள்தாம் இந்த வாய்ப்புகளைப் பெருமைக்குரிய வகையிலும், பயன்படுத்திக்கொள்ளும் தன்மையிலும் பெற்றன.

கி. பி. 1492-ம் ஆண்டு கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்துவிட்டு வந்து சொல்லியவுடனே, புதிய புதிய நாடுகளை மேற்கேயும் கிழக்கேயும் கண்டு பிடிக்க வேண்டும் என்ற ஆர்வம், மேற்கு ஐரோப்பிய நாடுகளிடையே அரும்பத் தொடங்கிற்று. புதிய நாடு கண்டு பிடிக்கும் முயற்சியில் போர்த்துகேசு, டச்சு, ஸ்பானிஷ், பிரெஞ்சு, பிரிட்டிஷ் மாலுமிகள் மிகத் தீவிரமாக ஈடுபட்டனர்.

1601-ம் ஆண்டு பசிபிக் மாக்கடலில் பயணம் செய்த போர்த்துகேசிய மாலுமி ஒருவன் தான் முதல் முதல் ஆஸ்திரேலியாக் கண்டத்தைக் கண்டான். க்யூபிரோஸ் என்ற டச்சு மாலுமி 1606-ம் ஆண்டு ஆஸ்திரேலியாவின் வடக்குப் பகுதியில் இறங்கி சிறிது தொலைவு சுற்றிப் பார்த்தான். அதற்குப் பிறகு பலர் மேற்கு வடக்குப் பகுதிகளில் வந்து இறங்கி இறங்கிப் பார்த்து விட்டுச் சென்றனர். 1642-ம் ஆண்டுக்கும் 1644-ம் ஆண்டுக்கும் இடையில் ஏபெல் டாஸ்மன் என்பவன் முதன் முதலாக ஆஸ்திரேலியாவின், தெற்குப் பகுதியில் பயணம் செய்து தென் கடற்கரையைக் கண்டான். இவர்கள் எல்லோரும் வெறும் புல் வெளியையும், பாலை நிலத்தையும், பட்டுமே கண்டதால், இந்த நாடு குடியேறுவதற்கோ, வர்த்தகத்துறைக்கோ ஏற்றதல்ல என்று முடிவு செய்து, அதனைப் புறக்கணித்து விட்டனர். அதற்குப் பிறகு சுமார் 130 ஆண்டுகள் காலம் ஆஸ்திரேலியாவைப்பற்றி யாரும் அக்கரை கொள்ளவில்லை. இந்தக் காலங்களில் மேலை நாட்டவரின் நோக்கமெல்லாம் அரேபியா, இந்தியா, பர்மா, சீனு ஆகிய நாடுகளோடு வாணிகம் செய்தும், அந்நாடுகளின் பகுதிகளைக் கைப்பற்றியும் பெரும் பொருள் ஈட்டுவதிலே பதிந்து கிடந்தது.

1772-ம் ஆண்டு ஜேம்ஸ் குக் என்ற ஆங்கிலக் கடற் படைத்தலைவன் ஆஸ்திரேலியாவின் கிழக்குக்கரையை முதன் முதல் கண்டு, அதன் வளமான நிலத்தையும், செழிப்பான காடுகளையும் கண்டு பூரித்துப் போனுன். அவனோடு வந்த பாங்க்ஸ் என்ற மாநூல் அறிஞன் அந்தப் பகுதியை வாழ்வதற்கேற்ற நல்ல பகுதியாக ஆக்கிக் கொள்ளலாம் என்று கூறினுன். இருவரும் இங்கிலாந்து சென்றடைந்த பிறகு, ஆஸ்திரேலியாவின் கிழக்குப் பகுதியைக் குடியேற்ற நாடாக ஆக்கிக் கொள்ளலாம் என்ற கருத்தினை அரசியலார்க்குத் தெரியப் படுத்தினர். 1783-ம் ஆண்டில் கூடிய பாராளு மன்

விடும் போலிருந்தது. ஆனால் ஆர்தர் பிலிப் கொண்டிருந்த தளரா ஊக்கம், எஞ்சி வாழ்வோர்க்கு உணர்ச்சி ஊட்டி வந்தது. குடியேறியவர்கள் அரைப் பட்டினியோடு இருந்தாலும், எதிர் காலம் நல்ல பலனைக் கொடுக்கும் என்ற நம்பிக்கையினாலேயே பாடுபட்டு வந்தனர். பிலிப் ஒருதடவை கூறும் போது, "பிரிட்டன் பிடித்த நாடுகளில், இது மிக்க இலாபகரமானதாக விளங்கப் போகிறது" என்ற கருத்தை வெளியிட்டார். பிலிப்புக்குப் பிறகு 1795-ல் காப்டன் ஹன்டர் என்பவர் கவர்னரானார். அவர் ஒழுங்கீனம் தலைவிரித்தாடிய ஆஸ்திரேலியாவில், ஒழுங்கையும், சட்டத்தையும் நிலை நாட்டினார்.

ஆஸ்திரேலியாவிலுள்ள பரந்த புல் வெளியைப் பார்த்து, அதில் செம்மறியாட்டுப் பண்ணையை வைத்துக் கம்பளி உற்பத்தி செய்யலாம் என்ற திட்டத்தை ஜான் மக்ஆர்தர் என்பவர் தீட்டினார். அவர் வங்காளத்திலிருந்தும், தென் ஆப்ரிக்கா கேப் டவுனிலிருந்தும் செம்மறியாடுகளைக் கூட்டிக் கொண்டு போய், அவ்விரு இனத்தையும் ஒன்று கலக்கச் செய்து புதியதொரு நிரப்ப கம்பளி தரும் இனத்தை உண்டாக்கினார். அவருடைய முயற்சி செழித்தோங்க வேண்டி, அரசாங்கம் அவருக்கு 5000 ஏக்கர் புல் நிலத்தையும், ஆடுகளை மேய்ப்பதற்குப் பயன்படும்படி சில கைதிகளையும் கொடுத்தது. அவரே மாட்டுப் பண்ணையும் வைத்து வளர்க்கத் தொடங்கினார். ஆஸ்திரேலியாவில் ஆடுமாடு பெருகியதற்கும், மிகவாகக் கம்பளி உற்பத்தி ஏற்பட்டதற்கும் முக்கிய காரணமானவர் ஜான் மக் ஆர்தரே யாவார்.

1806-ம் ஆண்டில், ஆஸ்திரேலியாவில், வெள்ளையரின் மொத்த எண்ணிக்கை 9462 ஆக ஆகி விட்டது. 1788-ம் ஆண்டுக்கும் 1806-ம் ஆண்டுக்கும் இடையில் சாகுபடிக்குக் கொண்டுவரப்பட்ட நிலங்கள் 1,65,882 ஏக்கர்களாகும். அவற்றில் கோதுமை, சோளம், பார்லி, உருளைக் கிழங்கு முதலியன பயிராக்கப்பட்டன. ஆடு, மாடு, குதிரை, பன்றி இவைகளின் எண்ணிக்கை 37,768-க்கு வளர்ந்தது.

இப்படியாக ஆஸ்திரேலியாவின் கிழக்குப் பகுதியும், தென் கிழக்குப் பகுதியும், மேற்குப் பகுதியும் குடியேற்ற நாடுகளாக மலர்ந்து, பின்பு கூட்டாட்சியாக இணைந்து, இன்றைய நிலையில் 72 லட்சம் மக்களைக்கொண்ட நாடாக அது தோற்றம் அளிக்கிறது. முக்கியமாக கம்பளி ஆடைகள், கோதுமை, தங்கம், இறைச்சி, பால் பொருள்கள் ஆகியவற்றை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து பெரும் பொருள் ஈட்டிக்கொள்ளும் செல்வச் செழிப்புள்ள நாடாகக் காட்சியளிக்கிறது. முதன் முதல் வெள்ளையர்கள் குடியேறிய போது சுமார் 11 லட்சம் பேர்களாக இருந்த உள் நாட்டு மக்கள் 1881-ம் ஆண்டில் சுமார் 770 பேர்களாகக் குறைந்து போனார்களாம். இப்பொழுது அறவே அந்தப் பழங்குடியினர் அழிந்து போய்விட்டனர்.

கைதிகளைக் குடியேற்றுவதற்கென்று துவக்கப்பட்ட ஆஸ்திரேலியா, இன்றைய நிலையில் பிரிட்டிஷ் காமன்வெல்த்தில் சிறந்த ஒரு நாடகத் திகழ்கிறது!

பிரிட்டிஷாருக்கும், ஏனைய ஐரோப்பியர்க்கும் பிறந்த ஊக்கமும், உணர்ச்சியும், இந்திய துணைக்கண்டத்தார்க்குப் பிறந்திருக்குமாயின், இந்திய துணைக்கண்டம் இது நேரத்தில் செல்வச் சிறப்புடைய ஒரு துணைக்கண்டமாகத் திகழ்ந்திருக்குமன்றோ!

றக் கூட்டம் ஒன்றில், இங்கிலாந்து நாட்டுக் கைதிகளை ஆஸ்திரேலியாவில் குடியேற்ற எண்ணி, அந்தப்படிக்கு முடிவும் செய்தது. ஆனால் நீண்ட தொலைவையும், அதனால் ஏற்படும் பணச் செலவையும் கருதி, அந்தத் திட்டத்தை உடனடியாக நடைமுறைக்குக்கொண்டு வராமலிருந்தனர் அரசியலார்.

கி. பி. 1600-ம் ஆண்டிலிருந்து, அட்லாண்டிக் மாக்கடலில் கண்டுபிடிக்கப்பட்ட சில பிரிட்டிஷ் குடியேற்ற நாடுகளுக்கு, பிரிட்டிஷ் கைதிகளை ஏற்றுமதி செய்வது என்ற வழக்கம் கைக்கொள்ளப்பட்டது. குற்றக் கைதிகள் 8 பவுனிலிருந்து பலவிலைகளுக்குக், குடியேற்ற நாட்டு நிலக் கிழார்களுக்கு விற்கப்பட்டனர். கைதிகளின் உழைப்பு குடியேற்ற நாட்டுக்கு நல்ல முறையில் பயன்பட்டதோடு, அவர்களை விற்பதனால் ஏற்படும் வருவாய் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்கு நல்ல பயனையும் தந்தது. இந்த முறையை ஒட்டித்தான், ஆஸ்திரேலியாவுக்குக் கைதிகள் அனுப்புவது பற்றிப், பிரிட்டிஷ் பாராளு மன்றம் 1783-ல் முடிவு செய்தது.

அமெரிக்காவில் விடுதலைப்போர் நடந்த போது, இங்கிலாந்துக்கு ஆதரவாக இருந்தவர்கள், விடுதலைப்போரின் வெற்றிக்குப் பிறகு அமெரிக்காவை விட்டு வெளியேற்றப்பட வேண்டிய நிலைமைக்கு ஆளாயினர். அவர்களை ஆஸ்திரேலியாவில் குடியேற்றுவதற்காக எடுத்துக்கொண்ட முயற்சியும் உடனடியாக நடைமுறைக்குக் கொண்டுவர இயலவில்லை.

இங்கிலாந்தின் வெளி நாட்டுக் காரியதரிசியாக இருந்து வந்த லார்டு சிட்னி என்பார், சுமார் எழுநூறு அல்லது எண்ணூறு கைதிகளை ஆஸ்திரேலியாவில் முதன் முதலாகக் குடியேற்றுவதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு, 1786-ம் ஆண்டில், பிரிட்டிஷ் கடற்படை அதிகாரிகளுக்குக் கட்டளை யொன்று பிறப்பித்தார்.

இறுதியாக 1787-ம் ஆண்டு காப்டன் ஆர்தர் பிலிப் என்பார் கவர்னராக நியமிக்கப்பட்டு, அவர் தலைமையின் கீழ் ஒன்பது கப்பல்கள் பயணப் படுத்தப் பட்டன. அவற்றில் ஆறு கப்பல்களில் பிரயாணிகளும், மூன்று கப்பல்களில் அவர்களுக்குத் தேவையான பொருள்களும் ஏற்றப்பட்டிருந்தன, மொத்தம் 1163 பேர்கள் கிளம்பினார்கள். அவர்களில் 720 பேர்கள் கைதிகள், 443 பேர்கள் பொதுமக்கள். அவர்கள் 1787-ம் ஆண்டு மே திங்கள் 13-ம் நாள் புறப்பட்டு, 1788-ம் ஆண்டு ஜனவரித் திங்கள் 18-ம் நாள், வழியில் இறந்துபட்டவர்கள் சிலர்போக மீதிப் பேர்கள் ஆஸ்திரேலியா சென்றடைந்தனர்.

குடியேற்றக்காரர்கள் முதலில் பெருந் தொல்லைகளையும், துயரங்களையும் ஏற்க வேண்டி நேர்ந்தது. உணவு, உடை போன்ற இன்றியமையாத பொருள்களைத் தாயகத்திலிருந்து வரவழைத்துக் கொள்ள வேண்டியவர்களாக இருந்தனர். அரைப் பட்டினியாக இருந்து கடும் உழைப்பு செய்ய வேண்டியவர்களாக இருந்தனர். தாயகத்தை எதிர் பார்க்காமலேயே வாழ்வதற்கு ஏற்ற வகையில், உணவுப் பெருக்கத்தையும், உற்பத்திப் பொருள்கள் பெருக்கத்தையும் அவ்வளவு குறுகிய நாட்களுக்குள் செய்து கொள்ள முடியவில்லை. இப்படிப்பட்ட தொல்லைகள் ஏற்படக்கூடும் என்று கருதிதான், ஆர்தர் பிலிப், குடியேற்றம் நடைபெறுவதற்கு ஆறு திங்கள்களுக்கு முன்பே, உழவுத் தொழிலாளர்களும், தொழில் வினைஞர்களும் சென்றிருந்து ஆஸ்திரேலியாவைப் பக்குவப்படுத்தி வைக்க வேண்டும் என்ற கருத்தைப் பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் வற்புறுத்திப் பார்த்தார். அரசாங்கம் அப்பொழுது சரியாகச் செவி கொடுக்காத காரணத்தால், இப்பொழுது பல தொல்லைகளை ஏற்க வேண்டி வந்தது. பலர் இறந்து படவும் செய்தார்கள்.

கைதிகள் வேலை செய்ய ஒருப்படுவதில்லை; ஆனால் பொதுவாக வந்த குடிகள் தங்களுக்கென்று நிலபுலங்களைப் பிரித்துக்கொண்டு, கடுமையாக உழைத்துப் பலன் காணுவதிலே கருத்தாக இருந்தனர். இந்த நிலையைக் கண்ட பிலிப் பொதுவான குடிமக்களை இன்னும் பலராகக் குடியேற்ற வேண்டும் என்பதில் நாட்டங்கொண்டார். மக்களோடு கால்நடைகளையும் கொண்டு சேர்க்க முயற்சித்தார். மக்களில் பெரும்பாலோர் வழியிலே இறந்து பட்டதோடு, கால் நடைகள் முழுவதும் அழிந்து போயின. மேலும் குடியேறிய மக்களுக்கும் அங்கு காடுகளில் வாழ்ந்து வந்த உள்நாட்டுக் காட்டு மிராண்டிகளுக்கும் இடையில் போர், கொலை, கொள்ளை முதலியன நடந்ததால், பிரிட்டிஷாரின் குடியேற்றக் கொள்கை மாய்ந்து

புரட்சிக்காலம் வரையில் புதிய காலத்திற்கான மறுமலர்ச்சி முயற்சிகள் நடைபெற்றன. பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு திட்டவட்டமான புதியகாலம் தோற்றம் எடுத்துவிட்டது எனக் கூறலாம்.

அறிவைக் கொண்டு செலுத்துவதற்கான வசதிகள் ஏற்பட ஏற்பட, குறைநலங்காணுதல், கருத்துக்களைப் பரிமாறுதல் போன்ற பண்புகள், மனிதனின் ஒவ்வொரு துறையிலும், மிக்க வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டன. பல நூற்றுண்டுகளின் தேக்கத்திற்குப்பிறகு, இயற்கையின் சட்ட திட்டங்களை அறியும் அறிவியல், பெரும் வகையில் வளர்ச்சியுற்று, மனித சமுதாயத்திற்கு நன்மைகள் பல புரியத்தொடங்கிற்று. கோபர்னிக்கஸ்ஸிலிருந்து, சர் ஐஸக் நியூட்டன் வரையில் மறுமலர்ச்சி அறிவியல் அறிஞர்கள் பலர் தோன்றி, அறிவியல் கண்டுபிடிப்புகள் பலவற்றைக் கண்டுபிடித்தனர். அவர்களில் கலீலியோ, கெப்லர், பிரான்சிஸ் பேக்கன் முதலாயினோர் முக்கியமானவர்கள். அவர்கள் சோதிடக்கலை இருந்த இடத்தில் வான நூற்கலையையும், மந்திரவாதிக்கலை இருந்த இடத்தில் கலவையியலையும் நிலைநாட்டினர். பதினெட்டாம் நூற்றுண்டில் கண்டுபிடிக்கப்பட்ட நீராவி ஆற்றலும், மின் ஆற்றலும் தொழிலுலகில் எவ்வளவோ மாற்றங்களைச் செய்துவிட்டன.

இலக்கியத் துறையை எடுத்துக்கொண்டால், இத்தாலியில் முன்கூட்டியே மறுமலர்ச்சி தோன்றி புகழ்மணம் வீசிக்கொண்டிருந்தது எனக் கூறலாம். தாந்தே போன்ற கவிஞர்கள் இலத்தீன் மொழிக்கு இலக்கியமணம் ஊட்டினர்கள். ஜெர்மனியிலும் கேதே மறுமலர்ச்சி இயக்கத்துக்குச் சற்று முன்பே அவ்வித இயக்கத்திற்கு அடிகோலிவிட்டார் என்னலாம். பதினாறுவது நூற்றுண்டில் இங்கிலாந்தில் தோன்றிய ஷேக்ஸ்பியரைத் தலைமையாகக் கொண்ட எலிசபெத காலத்திய இலக்கிய அறிஞர்களும், போர்ச்சுகலைச் சேர்ந்த காமோயென்ஸ், ரான்சார்டு, பிளேய்டே போன்றவர்களும், பிரான்ஸைச் சார்ந்த மான்டேய்னும், ஸ்பெயினைச் சேர்ந்த சேர்வான்டேஸ் என்பானும், இத்தாலியில் தோன்றிய டாஸோவும் மறுமலர்ச்சி இலக்கியங்களை உண்டாக்கியவர்களாவார்கள். 17 வது நூற்றுண்டிலும் மறுமலர்ச்சி இலக்கியங்கள் எங்கணும் வளர்ச்சியுற்றன. ஸ்பெயினில் கால்டெரனும் இங்கிலாந்தில் மில்டன், டிரைடன், பன்யன், டிபோ ஆகியோரும், பிரான்சில் கார்னேல்லி, மோலியர், ரஸீன் போன்ற நாடகாசிரியர்களும், பாய்லியா போன்ற குறைநலங் காண்போரும் தோன்றிப் புதிய காலத்திற்கு இலக்கியமெருகு பூசினர். 18-வது நூற்றுண்டில், பிரெஞ்சுப் புரட்சிக்கு முன் கட்டுரையாளர்களும், உரைநடை நூல் யாப்போரும், கவிதை புனைவோரும் எல்லா நாடுகளிலும் சிறந்து விளங்கினர்.

கத்தோலிக்கச்சர்ச்சின் ஆதிக்கத்தை எதிர்த்துக் கிளம்பிய மதச் சீர்திருத்த வீரர்களும் புதியகாலப் பொலிவுடன் திகழ வழிகோலினர். பதினாறுவது நூற்றுண்டில் ஐரோப்பாவின் பல பகுதிகளிலும் மத ஆதிக்க எதிர்ப்புப் போராட்டங்கள் ஏராளமாக நடந்தேறின. அச்சுப்பொறி கண்டுபிடிப்பு இந்தப் போராட்டங்களுக்குப் பேருதவியாக இருந்தது. 17-வது நூற்றுண்டில் டேஸ்கார்டேஸ், ஸ்பினோசா, லேய்பினிட்ஸ் போன்றுரும், 18-வது நூற்றுண்டில் பேர்கேலே, டேவிட்ஹியூம், காண்ட் போன்றுரும் புதுமைக் கருத்துக்களைப் பரப்பிய பெரியோர்களாய்த் திகழ்ந்தார்கள். பிரெஞ்சு நாட்டில் தோன்றிய ரூசோ, வால்டேர் போன்ற சிந்தனைச் சிற்பிகளின் எழுத்துக்கள் புதிய காலத்திற்கு ஊட்டம் கொடுத்தன.

இந்த மறுமலர்ச்சிக் காலத்தில் அரசியல் தத்துவ அறிஞர்கள் பலர் தோன்றி அரசியல் கொள்கையையும், அமைப்பையும், முறையையும் வகுத்தவர்கள். பிரிட்டனில் உலகிற்கு எடுத்துக்காட்டாக விளங்கக்கூடிய ஜனநாயக அரசுமுறை வளர்ந்தோங்கியது.

உலகில் புதியநாடுகள் பலவற்றைப் பிடித்து அவற்றைத் தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டு வரவேண்டும் என்ற முயற்சியில் ஸ்பெயின், போர்ச்சுக்கல், டச்சு, பிரெஞ்சு, பிரிட்டிஷ் ஆகிய நாடுகள் தமக்குள் போட்டி போட்டுக் கொண்டு இறங்கின. டச்சு, பிரெஞ்சு, பிரிட்டிஷ் ஆகியநாடுகள் தம் முயற்சியில் வெற்றி பெற்றன. மிக்க வெற்றிபெற்ற நாடு பிரிட்டிஷேயாகும். அவைகள், உலகில் பலநாடுகளைக் குடியேற்ற நாடுகளாகவும், ஆதிக்கம் செலுத்தும் நாடுகளாகவும் கொண்டு, தாங்கள் பேரரசுகளாக இருந்துகொண்டு ஆளத்தொடங்

புரட்சிக்காலம் வரையில் புதிய காலத்திற்கான மறுமலர்ச்சி முயற்சிகள் நடைபெற்றுப் பிரெஞ்சுப் புரட்சிக்குப் பிறகு திட்டவட்டமான புதியகாலம் தோற்றம் எடுத்துவிட்டது எனக் கூறலாம்.

அறிவைக் கொண்டு செலுத்துவதற்கான வசதிகள் ஏற்பட ஏற்பட, குறைநலங்காணுதல், கருத்துக்களைப் பரிமாறுதல் போன்ற பண்புகள், மனிதனின் ஒவ்வொரு துறையிலும், மிக்க வேலைசெய்ய ஆரம்பித்துவிட்டன. பல நூற்றுண்டுகளின் தேக்கத்திற்குப்பிறகு, இயற்கையின் சட்டதிட்டங்களை அறியும் அறிவியல், பெரும் வகையில் வளர்ச்சியுற்று, மனித சமுதாயத்திற்கு நன்மைகள் பல புரியத்தொடங்கிற்று. கோபர்னிக்கஸ்ஸிலிருந்து, சர் ஐஸக் நியூட்டன் வரையில் மறுமலர்ச்சி அறிவியல் அறிஞர்கள் பலர் தோன்றி, அறிவியல் கண்டுபிடிப்புகள் பலவற்றைக் கண்டுபிடித்தனர். அவர்களில் கலீலியோ, கேப்லர், பிரான்சிஸ் பேக்கன் முதலாயினோர் முக்கியமானவர்கள். அவர்கள் சோதிடக்கலை இருந்த இடத்தில் வான நூற்கலையையும், மந்திரவாதிக்கலை இருந்த இடத்தில் கலவையியலையும் நிலைநாட்டினர். பதினெட்டாம் நூற்றுண்டில் கண்டுபிடிக்கப்பட்ட நீராவி ஆற்றலும், மின் ஆற்றலும் தொழிலுலகில் எவ்வளவோ மாற்றங்களைச் செய்துவிட்டன.

இலக்கியத் துறையை எடுத்துக்கொண்டால், இத்தாலியில் முன்கூட்டியே மறுமலர்ச்சி தோன்றி புகழ்மணம் வீசிக்கொண்டிருந்தது எனக் கூறலாம். தாந்தே போன்ற கவிஞர்கள் இலத்தீன் மொழிக்கு இலக்கியமணம் ஊட்டினார்கள். ஜெர்மனியிலும் கேதே மறுமலர்ச்சி இயக்கத்துக்குச் சற்று முன்பே அவ்வித இயக்கத்திற்கு அடிகோலிவிட்டார் என்னலாம். பதினாறுவது நூற்றுண்டில் இங்கிலாந்தில் தோன்றிய ஷேக்ஸ்பியரைத் தலைமையாகக் கொண்ட எலிசபெத காலத்திய இலக்கிய அறிஞர்களும், போர்ச்சுகலைச் சேர்ந்த காமோயென்ஸ், ரான்சார்டு, பிளேய்டே போன்றவர்களும், பிரான்ஸைச் சார்ந்த மான்டேய்னும், ஸ்பெயினைச் சேர்ந்த சேர்வான்டேஸ் என்பானும், இத்தாலியில் தோன்றிய டாஸோவும் மறுமலர்ச்சி இலக்கியங்களை உண்டாக்கியவர்களாவார்கள். 17 வது நூற்றுண்டிலும் மறுமலர்ச்சி இலக்கியங்கள் எங்கணும் வளர்ச்சியுற்றன. ஸ்பெயினில் கால்டேரனும் இங்கிலாந்தில் மில்டன், டிரைடன், பன்யன், டீபோ ஆகியோரும், பிரான்சில் கார்னெல்லி, மோலியர், ரஸீன் போன்ற நாடகாசிரியர்களும், பாய்லியா போன்ற குறைநலங் காண்போரும் தோன்றிப் புதிய காலத்திற்கு இலக்கியமெருகு பூசினர். 18-வது நூற்றுண்டில், பிரெஞ்சுப் புரட்சிக்கு முன் கட்டுரையாளர்களும், உரைநடை நூல் யாப்போரும், கவிதை புனைவோரும் எல்லா நாடுகளிலும் சிறந்து விளங்கினர்.

கத்தோலிக்கச்சர்ச்சின் ஆதிக்கத்தை எதிர்த்துக் கிளம்பிய மதச் சீர்திருத்த வீரர்களும் புதியகாலப் பொலிவுடன் திகழ வழிகோலினர். பதினாறுவது நூற்றுண்டில் ஐரோப்பாவின் பல பகுதிகளிலும் மத ஆதிக்க எதிர்ப்புப் போராட்டங்கள் ஏராளமாக நடந்தேறின. அச்சுப்பொறி கண்டுபிடிப்பு இந்தப் போராட்டங்களுக்குப் பேருதவியாக இருந்தது. 17-வது நூற்றுண்டில் டேஸ்கார்டேஸ், ஸ்பினேசா, லேய்பினிட்ஸ் போன்றாரும், 18-வது நூற்றுண்டில் பேர்கேலே, டேவிட்ஹியூம், காண்ட் போன்றாரும் புதுமைக் கருத்துக்களைப் பரப்பிய பெரியோர்களாய்த் திகழ்ந்தார்கள். பிரெஞ்சு நாட்டில் தோன்றிய ரூசோ, வால்டேர் போன்ற சிந்தனைச் சிற்பிகளின் எழுத்துக்கள் புதிய காலத்திற்கு ஊட்டம் கொடுத்தன.

இந்த மறுமலர்ச்சிக் காலத்தில் அரசியல் தத்துவ அறிஞர்கள் பலர் தோன்றி அரசியல் கொள்கையையும், அமைப்பையும், முறையையும் வகுத்தவந்தனர். பிரிட்டனில் உலகிற்கு எடுத்துக்காட்டாக விளங்கக்கூடிய ஜனநாயக அரசுமுறை வளர்ந்தோங்கியது.

உலகில் புதியநாடுகள் பலவற்றைப் பிடித்து அவற்றைத் தம் ஆதிக்கத்தின்கீழ்க் கொண்டுவரவேண்டும் என்ற முயற்சியில் ஸ்பெயின், போர்ச்சுகல், டச்சு, பிரெஞ்சு, பிரிட்டிஷ் ஆகிய நாடுகள் தமக்குள் போட்டி போட்டுக் கொண்டு இறங்கின. டச்சு, பிரெஞ்சு, பிரிட்டிஷ் ஆகியநாடுகள் தம் முயற்சியில் வெற்றி பெற்றன. மிக்க வெற்றிபெற்ற நாடு பிரிட்டிஷேயாகும். அவைகள், உலகில் பலநாடுகளைக் குடியேற்ற நாடுகளாகவும், ஆதிக்கம் செலுத்தும் நாடுகளாகவும் கொண்டு, தாங்கள் பேரரசுகளாக இருந்துகொண்டு ஆளத்தொடங்

கின. ஆனால் அமெரிக்கத் தனி உரிமைப் போரும், பிரெஞ்சுப் புரட்சியும் ஏற்பட்ட பிறகு, உலகில் வல்லரசுகளுக்கு அடிமைப்பட்டிருந்த நாடுகள் பலவும், உரிமை வேட்கையுற்று எழுந்து, உரிமைப் போர்கள்புரிய ஆரம்பித்தன. இன்றைய நிலையில் உலகில் உள்ள ஒவ்வொரு நாடும் தன்னை எந்த ஒரு நாடும் அடிமைப்படுத்தக்கூடாது என்றும், பெரிய நாடுகள் சிறியநாடுகள் என்ற வேற்றுமை பாராட்டாமல் சமத்துவ நிலை உலக அரங்கில் பெறவேண்டும் என்றும், தன்னைத்தானே போதுமான வசதியுடையதாக ஆக்கிக்கொண்டு தன்னைத்தானே ஆளவேண்டும் என்றும் எண்ணிடும் நிலைக்குப் புதியகாலம் வளர்ந்துள்ளது.

அவனவன், அவனவன் மனச்சான்றுக்கு ஏற்றபடி அடிப்படை உரிமைகளையும், தனிப்பட்ட உரிமைகளையும் பெற்று வாழவேண்டும் என்ற எண்ணம் புதிய காலத்தின் கூறாக இன்றைய நிலையில் அமைந்துள்ளது.

ஒவ்வொருவரும் சக்திக்கேற்றபடி உழைக்க வேண்டும்; தேவைக்கு ஏற்றபடி வசதிகளைப் பெறவேண்டும் என்ற பொருளாதாரக் கொள்கை எங்கணும் வேரூன்ற ஆரம்பித்துவிட்டது.

புதியகாலம் தோன்றுவதற்கு மறுமலர்ச்சி செய்த நன்மைகள் ஏராளம். ஆனால் அந்த நன்மைகள் எல்லாவற்றையும் உலகம் போதுமான அளவுக்குப் பயன்படுத்திக்கொள்கின்றதா, என்றால், அதுதானில்லை! குறிப்பாகக் கீழை நாடுகளில் புதியகாலம் அரும்பெடுத்திருக்கிறதேயொழிய, இன்னும் மலர்ந்தபாடில்லை. இந்தியத் துணைக்கண்டத்தில் இடைக்காலநிலைமைதான் இன்னமும் நீடித்துக் கொண்டு வருகிறது. இடைக்கால நிலைமை, ஒதுங்கிக்கொண்டு புதியகால நிலைமைக்கு இடமளிக்க இன்னமும் முன்வரவில்லை; மாறாக, புதியகால நிலைமையை விழுங்கி ஏப்பம்விட்டுக் கொண்டு தான்மட்டும் அசையாமல் அப்படியே வாழ முயலுகிறது. இந்தியத் துணைக்கண்டத்திலிருப்போர், புதியகால நன்மைகளையும், போக்கையும் நுகர்ந்துகொள்கிறார்கள்; ஆனால் தங்கள் பழைமை—இடைக்கால மனப்பான்மைகளை விட்டுக்கொடுக்க மனம் ஒருப்படுவதில்லை.

புதிய காலத்தின் நன்மைகளான ஈருருளி, நிலவூர்தி, புகைவண்டி, நீராவிக்கப்பல், வான ஊர்தி போன்றவையும் முழுக்க முழுக்கப் பயன்படுத்திக்கொள்வார்கள்; அதே நிலையில் காளைமாட்டுக் கடவுளையும், கருடக்கடவுளையும், எருமை வாகனத்தையும், எலி வாகனத்தையும் நம்பித் தூக்கிச்செல்லவும் செய்வார்கள்! தந்தி; தபால், செய்தித்தாள், வானொலி, டெலிவிஷன் போன்றவைகளையும் பயன்படுத்திக் கொள்வார்கள்; அதே நிலையில் காணாமற்போன சீதையை அலைந்து அலைந்து தேடித்திரிந்த இராமனது கடவுள்தன்மையையும் போற்றிப் புகழ்வார்கள்! எல்லோரும் பார்த்து மகிழக் கூடிய பேசும்படக் காட்சியையும் காண்பர்; அதே நிலை எங்கேயோ, எப்பொழுதோ, யாருக்கோ மட்டும் இருடபவாகனரூபராய்க் காட்சியளித்த செந்நிற மேனியனின் திறமையையும் போற்றுவார்கள்! யார் பேசுவதையும் பாடுவதையும் பதிந்துகொள்ளும் இசைத்தட்டுகளையும் கேட்டு இன்பமடைவர்; அதே நிலையில் தந்தையைக்கொன்று தாயைப் புணர்ந்தவனுக்கு ஆண்டவன் அசரீரியாக அருளிய அபயச்சொற்களைக் கேட்டுப் பூரித்துப்போவார்கள்; புதிய போர்க்கருவிகளை உற்பத்தி செய்யவும், காத்துவைக்கவும், கையாளவும் செய்வார்கள்; அதே நிலையில் பரந்தாமன் ஏந்திய சக்கரத்தையும், பார்வதிமணாளன் ஏந்திய மழுவையும், ஆறுமுகனது வேலையும், அர்ச்சுனனது வில்லையும் பூஜைசெய்து போற்றிப் புகழ்வார்கள்! புதியகால மருந்துவகைகள் அனைவற்றையும் சாப்பிடுவார்கள்; அதே நிலையில் மாரியம்மையின் மகத்துவத்தையும், காளியம்மையின் கடாட்சத்தையும், மந்திரத்தின் மகிமையையும் துணைவேண்டி நிற்பார்கள்! 750 மைல் விரைவில் வானவூர்தியிலே பறந்துசெல்பவனின் திறமையைச் செய்தித்தாள்களிலே படித்து மகிழ்வார்கள்; அதே நிலையில் 750 டன் எடையுள்ள தேரிலே $7\frac{1}{2}$ பவுண்டு எடையுள்ள செப்புக் கடவுளை வைத்து இழுத்து இறும்பூதெய்துவார்கள்! உலகின் சுழற்சி, ஞாயிற்றின் இருப்பு, மதியின் போக்கு ஆகியவற்றை வானநூலில் படித்து ஒப்புக்கொள்வார்கள்; அதே நிலையில் சந்திரகிரகணம், சூரியகிரகணம் ஆகியவற்றைப் பாம்பு விழுங்குவதாகக் கொண்டு தர்ப்பணம் செய்து நிற்பார்கள்! விலங்கு நூல் படித்து உள்ளது சிறத்தல் என்ற கருத்தில் தெளிவடைவார்கள்; அதே நிலையில், நரியைப் பரியாக்கிய ஆலவாய் அப்பனின் பெருமையை விழாக்கொண்டாடி மகிழ்வார்கள்! உடற்கூறு

நூலை ஐயமறக்கற்று வைத்தியத்தொழில் புரிவார்கள்; அதே நிலையில் தலையை வெட்ட வெட்ட யானைத்தலை, கிளித்தலை, சிங்கத்தலை, குதிரைத்தலை, மாட்டுத்தலை ஆகியவற்றோடு மீண்டும் மீண்டும் காட்சியளிக்கும் சூரசம்ஹாரப் பண்டிகையை முன்னின்று நடத்துவார்கள்! அறிவுடையார் எல்லாம் உடையர் என்பதை நடைமுறை வாழ்க்கையில் கண்டு தெளிவடைவார்கள்; அதே நிலையில், தம்மைத்தாமே காப்பாற்றிக்கொள்ள முடியாத, ஆபாசமான கற்பனைக் கடவுள்களிடம் தஞ்சமடைந்து வரங்கேட்டு நிற்பார்கள்!

இந்தியத் துணைக்கண்டத்தில் பழைய—இடைக்காலக் கருத்துக்களும் புதியகால கருத்துக்களும் அடுத்தடுத்து இடம்பெற்று நிற்கின்றன. புதியகால கருத்துக்களால் பெறதகூடிய நன்மைகள் அத்துணையையும் பெற்றுக்கொண்டு, பாராட்டுதலையும், பெருமையையும், புகழையும் பழைய—இடைக்காலக் கருத்துக்களுக்கே கொடுக்கும் மனப்பான்மையை இன்னமும் நிலவிவருகிறது. சுருங்கக்கூறினால் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்ட பழமை-புதுமை ஆகிய இருவகைக் கருத்துக்களையும் ஏற்றுக்கொண்டு இரட்டை மனப்பான்மையராக, இரட்டைச் சொல்லினராக, இரட்டை வாழ்வினராக வாழ்வோர் தொகையே ஏராளமாக இருக்கின்றது.

இத்தகைய இரட்டைத்தன்மையொழிந்து, காலத்திற்கு ஏற்றவாறும், வாழ்வுக்கு வசதியும், வளமும், இன்பமும் அளிக்கத்தக்கவாறும் அமையும் புதியகால நிலைமையான ஒரே தன்மைக்கு, இந்த நாட்டுமக்கள் இழுத்துச் செல்லப்பட்டாலன்றி, இன்பவாழ்வு எய்தமுடியாது. இந்த உண்மையை நன்கு அறிந்துள்ள காரணத்தால்தான், தமிழகத்திலுள்ள பகுத்தறிவு இயக்கம், பகுத்தறிவைப் பரப்புவதன்மூலம் மனிதவாழ்வை உயர்த்தவும், உள்ளன்பை ஊட்டுவதன்மூலம் மனித சமுதாயத்தை ஒன்றுபடுத்தவும் ஆன சீரிய பணிகளில் ஈடுபட்டிருக்கின்றது. அது வெற்றிபெறும் நாளே, இந்தநாடு விழிப்படையும் நாள்—ஈடேறும் நாளாகும்!

★●★

முழுப் பைத்தியம்

வகுப்பில் நடந்துகொண்டிருந்த பாடத்தில் எத்தகைய உற்சாகமும் காட்டாமல், மாணவர்கள் பேசாமல் அமர்ந்திருந்தார்கள். ஏதாவது வேடிக்கையாக ஒன்று சொல்லி, அவர்களை உற்சாகமூட்ட ஆசிரியர் நினைத்தார். உடனே புத்தகத்தை மூடி வைத்துவிட்டு, ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத விதத்தில் ஒரு கேள்வியைக் கேட்டார்.

“ஒரு வீட்டுக்கு நான்கு ஜன்னல்கள், பதினெட்டு கண்ணாடிகள், வெள்ளை பூசப்பட்டிருக்கிறது. அப்படியானால், என்னுடைய வயது என்ன?”

ஆசிரியருடைய கேள்வி, மாணவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. ஆச்சரியத்தால் பேசாமல், ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர். கடைசியாக ஒரு பையன் எழுந்து “வயது 42” என்றான்.

ஆசிரியர் இப்பொழுது ஆச்சரியப்பட்டார். உண்மையில் அவருடைய வயது 42 தான்! “உண்மைதான்! என்னுடைய கேள்வியிலிருந்து எப்படி உனக்குத் தெரிந்தது?” என்று பதில் சொன்ன பையனை ஆசிரியர் கேட்டார்.

அதற்குப் பையன் “எங்கள் வீட்டுக்குப் பக்கத்தில் ஒருவர் இருக்கிறார். அவருக்கு வயது 21. அவரை அரைப் பைத்தியம் என்று எல்லோரும் சொல்லுவார்கள்” என்று பதில் தந்தான்.

இலக்கியம்

வம்பு பேசிடும் பெண்கள்

கண்ணொடு கண் பேச காதல் மலர்கிறது!

கடைக்கணிந்த பார்வையில், இதழோரப் புன்னகையில் காதலன் தன் இதயத்தைச் சிறையெடுக்கும் காதலியைக் கண்டுகொள்ளு கிறான். கண்கள் காதலை அறிவிக்கின்றன. உண்மைதான்! ஆனால் இருவருக்குள் மறைவாக மலர்ந்த காதலை, புத்தம் புதுப்பார்வையில் இருவரும் கண்டுகொண்ட காதலை, ஊரும் உலகமும் கண்டுகொள்ளும்படி பாடுபடுவது வதந்தியாகும். வதந்தி பரவாவிட்டால், உற்றாரும் பெற்றோரும் அந்த இருவரின் காதலைப்பற்றி எப்படி அறிந்துகொள்ளமுடியும்? வீட்டிலே சண்டை சச்சரவும், ஊரிலே கேலியும் நகைப்பும், வதந்தி இல்லாவிட்டால் காதல் கொண்டோருக்குக் கிடைக்குமா?

காதல் பிறக்கும்பொழுதே சில சமயங்களில் அதற்கு முன்னதாகக்கூட, வதந்தி பிறந்துவிடும், காதலை உலகுக்கு அறிமுகப்படுத்த.

பொழுதுபோக்கு பேசுவோருக்கும், வம்பு மடத்தில் உட்கார்ந்திருப்போருக்கும் வதந்தி உற்ற நண்பனாக இருந்தபோதிலும், இளங்காதலர்க்கு மட்டும் தீராத பகைவனாயிருக்கிறான்!

காதற் பாதையில் தோன்றுகிற முதல் அபாய அறிவிப்பு வதந்தியாகும். நீலவானில் முழுநிலவு மிதந்துகொண்டிருக்கிறது, எவ்விதக் கவலையுமின்றி, அகமும் புறமும் குளிர்ந்த வண்ணம். ஆனால் எங்கிருந்தோ, ஒரு மூலையில் கிளம்பிய புகைச்சல்—ஒரு கருமேகம் மெதுவாக மேலெழுந்து, பரவி, கடைசியாக முழு நிலவை மறைத்துவிடுகிறது. அதுபோல இதய வானில் மலர்கிற காதல்நிலவை வதந்தியெனும் கருமேகம் மறைக்க முயலுவதுண்டு.

வதந்தியின் கூரிய கண்களுக்கு காதலர்களின் நடவடிக்கைகள் எதுவும் மறைந்துவிடுவதில்லை. "சாலையில் உலவிவந்தார்களா?" "சோலையில் சந்தித்தார்களா?" "மலர்த்தோட்டத்தில் அவள் மட்டும்தான் இருந்தாளா?" "நாழிக்கொரு செய்தி, மணிக்கொரு கடிதம் அவன் அனுப்புகிறானா?" என்றெல்லாம் வதந்தி விசாரித்தபடி இருக்கும். அரசியல் குற்றங்களுக்கு ஆளானவர்களை ஒரு அரசாங்கம் கவனிப்பதைவிட, காதற்குற்றத்துக்கும் ஆளான இருவரை, வதந்தி கண்காணிப்பது மிக அதிகமாகயிருக்கும். வதந்தி, காதலர்களை நிழல் போலத் தொடர்கிறது. எட்டி நின்று பார்க்கிறது. ஒட்டுக் கேட்கிறது. பின் ஊராருக்கு தனது செய்திகளைத் தருகிறது. வம்பு பேசுவோரின் பெருமுயற்சியால், காதலர் பிரிக்கப்படுகின்றனர். மலர்ந்த காதல் வாடுகிறது.

பண்டைத் தமிழிலக்கியத்தில் வதந்தியென்பது "அம்பல" எனவும், "அலர்" எனவும் குறிக்கப்படுகிறது. அம்பல் என்பது ஒருசிலர் தமக்குள் மறைவாகப் பேசிக்கொள்வதாகும். பின் அதுவே ஊரெங்கும் அதிகமாகப் பரவி, மறைவாகப் பேசுவது என்பதுபோய், வெளிப்படையாகப் பேசும் நிலைக்கு 'அலர்' என்று பெயர். இந்த இருவகையாக வதந்தி பேசப்படுதல், சங்க இலக்கியத்தில், காதலைப் பற்றிய அகப்பாட்டுகளில் அம்பல் எழுதல், அலர் தூற்றுதல் என விவரித்துக் கூறப்படுகிறது.

சங்க இலக்கியத்து எட்டுத்தொகையில் ஒன்றான நற்றிணையில், அலர் தூற்றுவோரைப் பற்றி தெளிவான விளக்கமும், அலர் பேசும் முறை, அதனால் காதலிக்கு ஏற்படும் துன்பம் முதலியனவும் ஒரு பாடலில் மிக அழகாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

நெய்தல் நிலத்தைச் சார்ந்த கடற்கரையோரம். அங்கு எழில் நங்கையொருத்தி வளர்ந்து வருகிறாள். அலைகள் மோதும் கடற்கரையோரத்தில், அமைதியுடன் கிடக்கும் கழிப்பரப்பில், சாலையிலும், சோலையிலும் அவள் விளையாடிக்கொண்டிருக்கிறாள். அவளுடைய தாயும், அவளைப் பேணி வளர்த்த செவிலித்தாயும் அவளுக்கு எல்லாவகையிலும் செல்லங்கொடுத்துச் சீராட்டிப் பாராட்டி

வளர்க்கின்றனர். அவளும் எவ்விதக் கவலையுமின்றி, வெள்ளிய திரைகள் கரையில் வந்து ஒதுக்குகிற வெண் சங்குகளையும், சிவந்த பவழங்களையும் சேர்த்து விளையாடுகிறாள். பின் சிறிது வயதானதும், கடற்கரையைச் சார்ந்த புன்னையும் தாழையும் சூழ்ந்த பொழிலில் தன் தோழிகளுடன் கண்பொத்தியும், பந்து எறிந்தும் விளையாடி வருகிறாள்.

அவள் வளர்கிறாள்; செல்லச் சிறுமி, சேல்விழி மங்கையாகிறாள். இளமை ததும்பும் முகத்தில், எழில் புதுமைபெற்றுத் தவழ்கிறது; கண்களில் ஒளி வீசுகிறது, கன்னத்தில் செம்மை பரவுகிறது. ஒருநாள் மடலவிழ்ந்து தாழை மணம் வீசும் பொழிலில், பொன் சரங்களைப்போன்று மலர்க்கொத்துகளை ஏந்தி நிற்கும் புன்னை மரத்தடியில் அவள் மட்டும் தனித்திருந்தாள்.

அப்பொழுது விரைந்து செல்லும் குதிரை மீதேறி ஒரு இளைஞன்—அவனும் ஒரு கட்டழகன் என்று நாம் கூறத் தேவையில்லை—வருகிறான். வழிதவறி, அவன் செல்லும் திசையறியாது அந்தப் பொழிலுக்குள் வந்துவிட்டான். புன்னை மரத்தடியில், புதுமலர் தொடுத்துக் கொண்டிருக்கும் மங்கையொருத்தியைப் பார்த்ததும், தன் குதிரையைத் தட்டி அவளருகில் சென்று, அவளை விளித்து, வழியெதுவெனக் கேட்டான்.

குனிந்த பார்வையை நிமிர்த்தி அவள் பார்த்தாள். தான் கேட்டதை மறந்து அவ்விளைஞனும் பார்த்தபடி நின்றான். ஏனென்று அவள் கேட்டாள். அவனோ ஒன்றுந் தோன்றாது நின்றான். விழியைப் பார்த்ததும், மொழி மறந்து நின்றான் அவன்.

அதற்குள் தோழி, அவளைக் கூப்பிட்டாள். எழுந்து சென்றாள். ஆனால் சிறிது தூரம் சென்றதும் அவள் திரும்பிப் பார்க்காமல் போகவில்லை.

மறுநாளும் அவள் உட்கார்ந்திருந்தாள். அந்த இளைஞனும் "வழிதவறி" அந்தப் பொழிலுக்குள் வந்தான். இருவரும் பேசினர். தோழி கூப்பிட்டாள், ஆனால் இன்று அவள் உடனே எழுந்து செல்லவில்லை. அந்த இளைஞன் பேசுவதைக் கேட்பதில் அவளுக்கு வேறெதுவும் காதில் விழவில்லை.

இருவரும் அடிக்கடி சந்தித்தனர், காதல் வளர்ந்தது.

கதை அத்துடன் நிற்கவில்லை. இருவரும் அடிக்கடிச் சந்திப்பதைப் பற்றி, அந்தக் கடற்கரையைச்சேர்ந்த சிற்றூரில் வதந்திகள் உலவின. அந்த இளமங்கையின் ஒழுக்கம் பற்றி, வம்பு பேசும் பெண்கள்—அந்தச் சங்ககாலத்திலும், வம்பு பேசுவோர் பெரும்பாலும், பெண்களாகவே இருந்தனர்-இழித்தும், பழித்தும்பேசினர். அவள் தன் வீட்டைவிட்டு வெளிக்கிளம்பினால் போதும், எதிர்ப்படும் பெண்கள் தமக்குள் அவளைப்பற்றி பேசாமல் இருப்பதில்லை. மற்றவர்கள் தன்னைப்பற்றிப் பேசிக்கொள்வதை அவள் உணர்ந்தாள். தான் கொண்ட தூய காதலுக்கு மாசு கற்பிக்கப்படுவதை அவளால் சகித்துக்கொள்ள முடியவில்லை. மனம் புழுங்கினாள். அவள் வருந்திய நேரத்திலெல்லாம், அவளுடைய நெருங்கிய தோழியொருத்தி தான் ஆறுதலளித்துவந்தாள்.

வம்பு பேசுவோர் அதிகப்பட்டனர், அவர்கள் பேசிக்கொள்வது கடைசியாக அந்தக் காதலியின் தாயின் காதிலும் விழுந்தது. தனது மகளின் ஒழுக்கம் பற்றி ஊரார் பேசுவது கண்டு, சினமடைந்த அவள், ஒரு கோலை எடுத்து, தன் மகளை அதட்டி—இரண்டொரு அடிகள் கூட விழுந்தன—இனி சோலைப்பக்கம் போகக்கூடாதெனத் திட்டி, வீட்டிற்குள்ளே இருக்கும்படி காவல் போட்டுவிட்டாள்.

காதலனைப் பார்க்க முடியாமல் அவள் கலங்கினாள். ஊரார் பழி தூற்றுவதும், தன்னைச் சீராட்டி வளர்த்த தாயே கோல்கொண்டு அடிக்க வந்ததும், அவளுக்கு ஆறாத் துயரைத் தந்தன. கண்கள் சோகமடைந்தன, கன்னத்தில் நீர் வழிந்தது; அவள் தனியே இருக்கும் நேரத்தில் காதலை நினைத்தும், தன் காதலனை நினைத்தும் வருந்தினாள். காதலனுக்கு இவையெதுவும் தெரியாது.

வழக்கம்போல் அவளைச் சந்திக்கும் சோலையில் அவன் வந்து காத்திருந்தும், தன் காதலியைக் காணமுடியவில்லை. கடைசியாக செய்தி ஏதும் தெரியாமல், காதலி இருக்கும் வீட்டின் பக்கம் வருகிறான். அப்பொழுது, காவலில் வைக்கப்பட்டுள்ள காதலியும், அவளது தோழியும் தோட்டத்தில் உட்கார்ந்திருக்கிறார்கள். மறைந்துவந்து, அப்புறம் நிற்கும் காதலனைத்

தோழி மட்டும் பார்த்துவிடுகிறாள். காதலிக்கு நேர்ந்துள்ள துன்பத்தைக் காதலனும் அறிய வேண்டுமென்று, தோழி காதலிக்குக் கூறுவது போல—காதலனுக்கும் கேட்கும்படி, பின்வருமாறு கூறுகிறாள் :

“தோழி! நீ வாழ்க! நம்மூர்த் தெருவிலுள்ள பெண்கள் சிலரும் பலரும் ஆங்காங்கு கூடிநின்று, கடைக்கண்ணாலே சுட்டிக்காட்டி, ஆச்சரியமடைந்தவர்கள் போல தத்தம் மூக்கினுச்சிமேல் சுட்டுவிரலை வைத்து, பழிகூறி தூற்றினார்கள். அப்பழி மொழிகளைக் கேட்ட உன் அன்னை சிறிய கோலை எடுத்து, சுழலும்படி வீசி, உன்னைக் கண்டித்தாள். இவற்றைக் கண்டு, நான் மிகவும் துன்பமடைந்தேன். ஆதலால் இத்துன்பமெல்லாம் தீரும்படி, கழியருகில் சோலையிலுள்ள புதுமலர்களைத் தீண்டி பூ மணம் வீசுகிற, நல்ல நிறம் பொருந்திய பிடரிமயிரினையுடைய விரைந்து செல்லும் குதிரை பூண்ட நெடிய தேரையுடைய தலைவனோடு, நீ செல்வதற்கு நான் உடன்படுகிறேன். நீ எழுவாயாக! அங்ஙனம் நீ சென்றொழிந்தால் பேரொலியையுடைய இவ்வூர் என்ன செய்யும்? வேண்டுமானால், அலர் தூற்றி அழிந்துபோகட்டும்” என்று சொன்னாள்.

இவ்வாறு தோழி கூறுவதுபோல், நற்றிணையில் 149-ம் பாடல் இருக்கிறது. அது உலோச்சனார் என்ற புலவர் பாடியதாகும். அந்த முழுப் பாடலும் கீழேக் கொடுக்கப்பட்டுள்ளது.

சிலரும் பலரும் கடைக்கண் நோக்கி
மூக்கி னுச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி
மறுகிற் பெண்டிர் அம்பல் தூற்றச்
சிறுகோல் வலந்தனள் அன்னை யலைப்ப
அலந்தனென் வாழி தோழி கானற்
புதுமலர் தீண்டிய பூநாறு குரூஉச்சுவற்
கடுமான் பரிய கதழ்பரி கடைஇ
நடுநாள் வரூஉம் இயல்தேர்க் கொண்கனொடு
செலவுஅயர்ந் திசினால் யானே
அலர்சுமந்து ஒழிகஇவ் வழுங்க லூரே.

இந்தப் பாட்டில் தெரிவிக்கப்படுவது மிகச் சிறிய செய்தியேயாகும். “ஊரிலுள்ள பெண்கள் உன்னைப் பற்றி பழித்துப் பேசினார்கள், அதனால் உன்தாய் உன்னைக் கண்டித்து வீட்டைவிட்டு வெளிச்செல்லாது காவல் செய்தாள் நீ படும் துன்பத்தைப் பார்க்கும் பொழுது, உன் காதலனுடன் நீ செல்வதற்கு நான் ஒத்துக்கொள்ளுகிறேன்” என்பதே தோழி தெரிவிக்கிறாள். ஆனால் அது, உலோச்சனாரின் தீந்தமிழ்க் கவிதையில் எவ்வளவு அழகும், பொருள் நுட்பமும் செறிந்து காணப்படுகிறது என்பதைப் பார்க்கலாம்.

ஊரிலுள்ள பெண்கள் பழி தூற்றுவதைப் புலவர் நன்றாகப் படம்பிடித்துக் காட்டுகிறார். சிறு சிறு கூட்டமாக அவர்கள் பேசிக்கொள்வதை, “சிலரும் பலரும், கடைக்கண் நோக்கி, மூக்கின் உச்சிச் சுட்டுவிரல் சேர்த்தி” அம்பல் தூற்றுகிறார்களாம். அவர்கள் காதலியைப் பார்த்து தம்முள் பேசிக்கொள்ளும்பொழுது, கடைக்கண்ணாற் பார்த்து, மூக்கின்மேல் விரலை வைத்துப் பேசிக்கொள்ளுகிறார்களாம். இதில் புலவர் இன்னும் குறிப்பாக ஒன்றை உணர்த்துகிறார். பாடலில் வரும் காதலி, குணத்தில் மேம்பாடுடைய குடியில் பிறந்தவள். அவள் ஒழுக்கத்தைப்பற்றியோ, குணநலத்தைப்பற்றியோ அதுவரை எதுவும், குற்றமேதும் காணப்பட்டதில்லை. எனவே வம்பு அளந்திடும் பெண்களே, அவளைக் கையால் சுட்டிக் காட்டிப் பேச அஞ்சுகிறார்களாம். அதனால் தான் கடைக்கண்ணால் மட்டும் பார்த்து அவர்கள் பேசிக்கொள்ளவேண்டியிருக்கிறது. அது மட்டுமல்லாமல் முதலில் அந்தக் காதலி

யைப் பற்றி ஓரிருவர் இழிவாகப் பேசியபோதிலும், கேட்பவர்கள் உடனே ஏற்றுக்கொள்வதில்லை. அந்த அவதூறை அவர்களால் நம்ப முடியவில்லை. எனவேதான் ஆச்சரியமுற்றவர்களாய், மூக்கின் உச்சியில் சுட்டுவிரலை வைத்து, "அப்படியா!" என்று கேட்கிறார்கள். இவ்வளவு பொருள் நயமும் நிறைய, "சிலரும் பலரும், கடைக்கண் நோக்கி, மூக்கின் உச்சி சுட்டுவிரல்சேர்த்தி" என்று புலவர் கூறுகிறார்.

இழிமொழிகளைக் கேட்டு கோபமுற்ற தாய், மகளைத் தண்டிக்கும் முறை வேடிக்கையானது. அவள் சிறு கோலை எடுத்தாளாம், அதனால் கூட அடிக்கவில்லை. நன்கு சுழற்றினாளாம். ஆனால் காதலி அதுகாறும் செல்லமாக வளர்க்கப்பட்டதாலும், தன்மானம்மிக்கப் பண்பாட்டில் வளர்ந்தவளாதலாலும், சிறுகோலைச் சுழற்றி அன்னை வந்ததே அவளுக்குப் பெருந்தண்டனையைத் தந்தது.

"நீ உன் தலைவனோடு செல்வதாயின், நான் உடன்பாடுடையேன்" என்று தோழி சொல்வதால், "நீ போகலாம்" என அவள் அனுமதிக்கதாகவோ, தூண்டுவதாகவோ ஆகாது. ஏனெனில் காதலிக்கு அவள் சொல்வது, மறுபுறத்தில் மறைந்து நிற்கும் தலைவனுக்குச் சொல்வதாகும். உண்மையில் காதலனுக்கு அவள் அறிவிப்பது "உன்பால் கொண்ட காதலினால், இவள் இவ்வளவு துன்பங்களையும் ஏற்றுக்கொண்டுள்ளாள். அவளுடைய துன்பம் நீங்க, நீ விரைவில் உரிய முறையில் வந்து, அலர் தூற்றும் பெண்கள் வெட்கமுற, தண்டிக்க வந்த தாய் உவந்துகொடுக்க, ஊரார் அறிய, நீ அவளைத் திருமணம் செய்துகொள்ளல்வேண்டும்" என்பதாகும். இதனைத் தோழி குறிப்பினாலேயே உணர்த்துகிறாள்.

தலைவன் என்று கூறும்பொழுது, "கடற்கரைப் பொழிலின் புதிய மலரைத் தீண்டி, பூமணம் வீசுகிற பிடரியினையுடைய, விரைந்து செல்லும் குதிரையுடைய தலைவன்" என்று சுற்றிவளைத்துச் சொல்லுகிறாள். அதில் உள் அர்த்தம் இல்லாமற்போகவில்லை.

"இவள்-என் தோழி-உன் காதலி இந்தக் கடற்கரைப் பொழிலில் மலர்ந்த புது மலரைப் போன்றவள், களங்கமற்ற மென்மையுடையவள்.

மலரைத் தீண்டினால் பெறும் மணம் போன்றது, இவளைச் சந்தித்ததால்—இவள் நெஞ்சத்தைத் தீண்டியதால், நீ பெற்ற காதல் மணம்.

உன் குதிரையோ விரைந்துசெல்லும் ஆற்றலுடையது. அதுபோல நீயும் உன் காதலியை அழைத்துக்கொண்டு விரைவாகச் செல்லுதல் முடியாத காரியமல்ல. ஆனால் அது கூடாது. அவள் கானலில் மலர்ந்த மலர், தென்றலில் அசைந்தாடிக்கொண்டிருப்பவள். அந்த மலரை குதிரை செல்லும் கடும் வேகத்துடன் துன்பப்படுத்தக்கூடாது. மலர் வாடிவிடும். அதுபோல் உன் காதலி உன்னோடு வரத் தயங்கமாட்டாளென்றாலும், அவள் வாட, வருந்த நீ ஏதும் செய்யக்கூடாது" எனத் தோழி அறிவுறுத்துகிறாள்.

கடைசியாக காதலியைப் பற்றி ஊரில் வம்பு பேசிடும் பெண்கள் எவ்வளவுதான் இழித்துப் பேசியபோதிலும், தோழிக்கு மட்டும் அவளிடத்துள்ள மதிப்பும், அன்பும் குறையவில்லை. மாறாக மிகவும் வளர்ந்து காணப்படுகிறது. அதனால்தான் "உன்னைப்பற்றி இந்த ஊர் குறை சொல்லுகிறது. நீ இந்த ஊரைவிட்டே நீங்கிவிடு; அப்பொழுது இந்த பொல்லாத ஊர் என்ன செய்யும்? அலர் தூற்றித் தூற்றி அழிந்துவிடும்" எனக் கோபமும், நகைப்பும் கலக்கச் சொல்லுகிறாள்.

இவ்வாறு தோழி குறிப்பாகச் சொல்லியது கேட்டு, காதலி படும் துன்பமறிந்து, தலைவன் மீண்டும் வந்து உரிய முறையில் அவளை மணந்து இன்புற்றான் என்க.

நற்றிணையில் உள்ள பாடல்களில் இதுவும் ஒன்று. இதைப்போன்று பண்டைத் தமிழிலக்கியத்தில் பலப்பல பாட்டுகள்—உலக இயல்பும், உள்ளத்து உயர்வும், காதலின் மாட்சியும், கவின்பெரு காட்சிகளும் தந்திடும் கவிதைகள் பல இருக்கின்றன.



தையற்கலை

[கே. பி. சுந்தரம் G. C. T.]

இடுப்புப்பட்டியும் பின்பக்கம் திறப்புடைய (ஒப்பன்) ப்ளவுஸ்

பண்டைக்காலத்தில் ஒரு நூற்றுண்டில் ஏற்பட்ட உடை மாறுதல் இன்று ஒரு மாதத்தில் அல்லது ஒரு வாரத்தில் ஏற்பட்டுவிடுகின்றது. இப்படி ஏற்பட்ட மாற்றத்தின் விளைவு தான் கீழே விளக்கப்பட்டுள்ள நீளம் குறைவான ப்ளவுஸ்—முன்பு விளக்கப்பட்டுள்ள ப்ளவுசின் ஒரு பிரிவாகும். நீளம் இடுப்போடு நின்று, இடுப்பை இறுக்கப் பிடிக்க பட்டி (பேண்ட்) உடையதும். கைநீளம் அதிகமாகவும், பின்பக்கம் திறப்பு (ஒப்பன்) உடையதும் முன்பக்கம் ஆடுதன் வடிவம் போன்று திறப்புடைய ப்ளவுசின் விளக்கமே இது :

அளவுகள் :

இடுப்புவரை முதுகு நீளம்	$14\frac{1}{2}$	அங்.
பாதித்தோள்	6	,,
மார்புச் சுற்றளவு	33	,,
இடுப்புச் சுற்றளவு	27	,,
கழுத்துச் சுற்றளவு	13	,,

1-ல் இருந்து 0 வரை $13\frac{1}{2}$ அங்.
(முழு நீளத்தில், இடுப்புப்பட்டி [பேண்ட்] அகலம் $1\frac{1}{2}$ அங். குறைவு.)

2-ல் இருந்து 0 வரை $6\frac{3}{4}$ அங்.
($\frac{1}{4}$ மார்பளவில் $1\frac{1}{2}$ அங். குறைவு)

3-ல் இருந்து 0 வரை $2\frac{3}{4}$ அங்.
($^1/_6$ கழுத்தளவு $+\frac{1}{2}$ அங்)

4-ல் இருந்து 0 வரை $6\frac{1}{4}$,,
(பாதித் தோள் $+\frac{1}{4}$ அங்)

5-ல் இருந்து 4 வரை $\frac{1}{2}$,,

6-ல் இருந்து 4 க்கு நேர்க்கோடு இணைக்கவும்

7-ல் இருந்து 2 வரை $9\frac{1}{2}$ அங்.
($\frac{1}{4}$ மார்பளவு $+1\frac{1}{4}$ அங். 7-க்கும், 2-க்கும் குறுக்குக்கோடு இணைக்கவும்)

8-ல் இருந்து 10 வரை $9\frac{1}{2}$ அங்.

9-ல் இருந்து 1 வரை $\frac{1}{2}$,,

10-ல் இருந்து 3 வரை $2\frac{3}{4}$ அங்.
($^1/_6$ கழுத்தளவு $+\frac{1}{2}$ அங்)

11-ல் இருந்து 0 வரை $2\frac{3}{4}$,,
($^1/_6$ கழுத்தளவு $+\frac{1}{2}$ அங்)



12-ல் இருந்து 0 வரை 1 அங்.

13-ல் இருந்து 6 வரை $1\frac{1}{2}$,,

14-ல் இருந்து 13 வரை $\frac{3}{4}$,,

15-ல் இருந்து 8 வரை 1 ,,

16, 12, எண்கள் உள்ள இடத்தில் பின்பக்கம் திறப்பு (ஒப்பன்) அமைக்கவும்.

பின்பக்கம் நீளம் முன்பக்கத்தைவிட $\frac{1}{2}$ அங்குலம் குறைவு.

16, 9, 15 எண்கள் வரை உள்ள கோட்டின் மீது வெட்டி எடுத்துவிடவும்.

9-க்கும் 15-க்கும் மத்தியில் முன்பக்கம் இரண்டு டக்குகள், நீளம் $2\frac{1}{2}$ அங். அகலம் $\frac{3}{4}$ அங். அமைக்கவும்.

பின்பக்கம் இரண்டு டக்குகள், நீளம் $2\frac{1}{2}$ அங். அகலம் $\frac{3}{4}$ அங். அமைக்கவும்.

16, 12, 3, 5, 14, 7, 15, 16 எண்கள் பின்பக்கம் இணைப்பவைகள்.

1, 11, 3, 5, 13, 7, 15, 1, எண்கள் முன்பக்கம் இணைப்பவைகள்.

முன்பக்கம் A, B, உள்ள இடத்தில் ஆட்டின் (ஆடுதன்) வடிவம் போன்று வெட்டியெடுத்து; ஆட்டின்போன்ற திறப்பு அமைக்கவும். பின்பக்கம் திறப்பு உள்ள இடத்தின்மேல் தைத்த பிறகு ஒரு அங்குலத்திற்கு ஒரு பட்டன்வீதம் கட்டலாம்.

பேண்ட் அகலம் 2 அங். இடுப்புச் சுற்றளவு $+1\frac{1}{2}$ அங். $28\frac{1}{2}$ அங். துண்டுகளை பேண்ட் ஷேப் படத்தில் உள்ளபடி செய்து மூன்று துண்டுகளாக வெட்டி எடுத்து பிறகு இணைத்துத் தைக்கவும்.

கை:

1-ல் இருந்து 0 வரை 11 அங்.
(கை நீளம் $+2$ அங். தோள்பக்கம் மடிப்புக்காக)

2-ல் இருந்து 0 வரை $6\frac{1}{4}$ அங்.
($1/8$ மார்பளவு $+2$ அங்)

3-ல் இருந்து 2 வரை $8\frac{1}{4}$,,
($\frac{1}{4}$ மார்பளவு, 3-ல் இருந்து 0 வரை சாய்வுக்கோடு வரையவும்)

4-ல் இருந்து 3 வரை $4\frac{3}{4}$ அங்.

5-ல் இருந்து 4 வரை $1\frac{1}{4}$ அங்.

6-ல் இருந்து 0 வரை 3 ,,

7-ல் இருந்து 6 வரை $3\frac{1}{2}$,,

8-ல் இருந்து 7 வரை $\frac{1}{2}$,,

9-ல் இருந்து 6 வரை 1 ,,

A-ல் இருந்து 8 வரை $\frac{3}{4}$ அங்

K-ல் இருந்து 9 வரை $\frac{1}{2}$,,



3, 8, 9, 0 எண்கள் பின்பக்கம் கைவளைவு இணைக்கவும்.

3, A, K, 0 எண்கள் வரை புள்ளிகள் வைத்துள்ள கோடு வரை முன்பக்கம் கை (கவர் தட்டு) வெட்டி எடுத்துவிடவும். முன்னங்கையில் பிளிட்டுகள் (மடிப்புகள்) அணிபவரின் விருப்பப்படி 3-ம் அல்லது 4-ம் அதற்கு மேற்பட்டும் வைக்கலாம். கையை வெட்டிய பிறகு முன் பக்கத்தை மட்டும் பிரித்தால் படத்தில் K, A, 3, 5 எண்களுடன் அமைந்த முன்பக்க வடிவம்போன்று காணப்படும். முன்னங்கையில் இருந்து A வரை இரண்டு பக்கமும் உள்ள புள்ளிகள் வைத்த கோட்டின்மீது வெட்டி மூன்று துண்டுகள் அமைந்த கையாகவும் தைக்கலாம். கை வெட்டத் தெரிந்த பிறகு அவரவர் ஆற்றலுக்கும் தகுதிக்கும் ஏற்ற விதத்தில் எத்தனை மாறுதல்கள் வேண்டுமானாலும் செய்யலாம். இந்த கைக்கு எத்தனையோ பெயர்கள் வழங்குகின்றன. அவற்றுள் இரண்டு மட்டும் குறிப்பிடுகின்றேன்—பப்பகை என்றும், இஸ்டெண்டிங்சிலீயூஸ் என்று வழங்கிவரும் பெயர்களாகும். தைப்பதற்கு $\frac{1}{4}$ அங். வைத்து படம் வரையப்பட்டுள்ளது பலர் பலவகையாக வெட்டித் தைக்கின்றனர். அவற்றுள் இது ஒரு வகை. விளக்கப்படத்தின் வடிவம்போல் அமைந்திருக்கின்றதா என்று ஒத்திட்டுப் பார்த்து வெட்டத் தொடங்கவும்.

கிளியோபாவின் காதலன்

"கிரிச்" "கிரிச்" என்ற சத்தம் என் அறையை நோக்கி வந்தது. படித்துக்கொண்டிருந்த புத்தகத்தை மூடி வைத்துவிட்டு, நான் உட்கார்ந்தேன். எதிர்பார்த்தபடி, கதவை வேகமாகத் தள்ளிக்கொண்டு மாசிலாமணி உள்ளே வந்தான். "ஏ, முத்து! கடம் வாசிக்க ஆரம்பித்துவிட்டாயா? பரீட்சை ஒரு மாதத்துக்கு முன்னேயே இப்படி நீ படிக்க ஆரம்பித்தால், எங்கள் கதியெல்லாம் என்ன ஆவது?" என்று மாசிலாமணி கேலிசெய்ய ஆரம்பித்தான்.

"சரி! அதென்ன உன் விரலில் கட்டுக் கட்டியிருக்கிறது"

"அதுவா? இன்றைக்கு ஆப்ரேஷன் செய்துகொண்டேன்."

"எப்படி உனக்கு அந்தத் துணிவு வந்தது?"

"விரலில் கட்டிபாதிரி வந்து ஒரு வருஷமா, அப்படியே இருந்தது."

"டாக்டரைப் பார்த்தியா?"

"மொத்தம் எட்டு டாக்டரைப் பார்த்தேன். நாலு டாக்டர் ஆபரேஷன் செய்யணும் என்றார்கள். நாலுபேர் வேண்டாம் என்றார்கள்."

"கடைசியாக"

"ஒன்பதாவது டாக்டரைப் பர்ர்க்கப் போனேன். அவர் ஆலோசனை எதுவும் சொல்லாமல், ஒரு இன்ஜெக்ஷனைப் போட்டு, கத்தியால் கீரிவிட்டு, போய்வா என்றார்."

"சரி, காரியம் எப்படி நடந்துவிட்டது."

மாசிலாமணி மேஜையின்மேல் இருந்த புத்தகங்களைப் புரட்டிக்கொண்டிருந்தான், நான் எழுந்து, உடைகளை மாற்றிக்கொண்டு வெளிக் கிளம்பத் தயாரானேன்.

"மணி! வா, போகலாம்!" என்று நான் அழைத்ததையும் அவன் கவனிக்காமல், ஆழ்ந்த யோசனையில் இருந்தான்.

"முத்து, உட்கார்! உன்னை ஒன்று கேட்க வேண்டும்." என்றான்.

அப்படியென்ன மிக முக்கியமானது கேட்கப்போகிறான் என்று எதிரே உட்கார்ந்தேன். மாசிலாமணி பேசாமல் சிறிதுநேரம் இருந்துவிட்டு, பின திடீரென்று என்னை உற்றுப் பார்த்து "கிளியோப்பாட்ராவைப்பற்றி நீ என்ன நினைக்கிறாய்?" என்று கேட்டான்.

யாரைப்பற்றிச் சொல்லுகிறான் என்று எனக்குப் புரியவில்லை. எங்களுடன் படிக்கும் பெண்களில், ஜூலியட், எலிசபெத், விக்டோரியா, இப்படி வேடிக்கைப் பெயர்கள் இருந்த போதிலும், கிளியோப்பாட்ரா என்று யாருக்கும் வைக்கப்பட்டதாக ஞாபகம் இல்லை. ஒரு சமயம் புதிதாக வந்திருக்கும் அவளைப் பற்றிச் சொல்லுகிறானோ என்று நினைத்தேன். ஏனென்றால், அவளைப்பற்றி மாசிலாமணி இரண்டொருமுறை என்னிடம் பேசியிருக்கிறான்.

"யார், அந்த......அவளைப்பற்றி கேட்கிறாயா?" என்றேன்.

"போடா, மண்டு! கிளியோப்பாட்ராவைப் பற்றிக் கேட்கிறேன்—எகிப்து நாட்டு எழிலரசி கிளியோப்பட்ரா அவளைப்பற்றி."

"சரித்திரத்தில் வருகிறதே....ஆண்டனி—கிளியோபாட்ரா."

"ஆமாம்! அதே கிளியோப்பட்ராதான்! அவளைப் பற்றி நீ என்ன நினைக்கிறாய்?"

"அவளைப் பற்றி நான் என்ன நினைக்கிறேன? அவளைப்பற்றி நான் ஒன்றுமே நினைத்ததில்லையே. கிளியோப்பட்ரா—கிளியோப்பட்ராதான்."

"முத்து! அவளைப்பற்றி உன் அபிப்பிராயம் என்ன என்று கேட்கிறேன். ஒவ்வொரு ஆசிரியரும்—ஷேக்ஸ்பியர், டெனிசன், ஷா, லுட்விக் போன்றோர் பலவிதமாகச் சித்தரித்திருக்

கிறார்கள். ஆனால் சரித்திரத்தில் அவளுடைக்கு உத்தகைய இடம், அவள் எப்படிப்பட்டவள், சொல்" என்று மாசிலாமணி கட்டாயப்படுத் தினான்.

என்பாடு தொல்லையாகிவிட்டது. காபி சாப்பிடப் போகலாமென்று கிளம்பினால், இவன் சரித்திரத்தைப் புரட்டி, எகிப்து நாட்டைப்பற்றியும், கிளியோப்பாட்ராவைப் பற்றியும் கேள்விகள் கேட்கிறான். இந்தக் காலத்துப் பெண்களைப்பற்றியே நம்மால் ஒன்றும் சொல்லமுடியாத நிலையில் இரண்டாயிரம் வருஷத்தில் எங்கோ இருந்தவளைப்பற்றி என்ன சொல்லமுடியும்? வேறு வழியின்றி "அவள் எப்படிப்பட்டவள், நீயே சொல்!" என்று கேள்வியைத் திருப்பிப் போட்டேன்.

மாசிலாமணி அந்தக் கேள்வியை எதிர்பார்த்துக்கொண்டிருப்பவன் போல, "இரு, இதோ வந்துவிட்டேன்" என்று சொல்லிவிட்டு, தன் அறைக்கு ஓடிப்போய், ஒரு கனமான புத்தகத்துடன் திரும்பிவந்தான்.

"இதோ பார்! இது டில்டன் நாரங் என்பவர் எழுதிய கிளியோப்பட்ராவின் வரலாறு இது வரை வெளிவந்துள்ள புத்தகங்களில்—முழு வரலாற்றையும், உண்மையான கண்ணோட்டத்தில் செய்யப்பட்ட ஆராய்ச்சியுடன் தந்திடும் நூல் இது ஒன்றுதான். நீ இதைப் படித்திருக்கிறாயா?"

"இருக்கிற புத்தகங்களைப் படிக்கவே நேரமில்லை. படித்தாலும் மண்டையில் ஏற்றி, பரிட்சை வரையில் அடக்கி வைத்திருப்பதற்குள் போதுமென்றாகிவிடுகிறது. இதில் இந்த கிளியோப்பட்ராவையும், நாரங் டில்டனையும் நானெங்கு படித்திருக்கப்போகிறேன்!"

மாசிலாமணி புத்தகத்தைப் புரட்டி ஒரு பக்கத்தை எடுத்து வைத்துக்கொண்டான். "இதோ, பார்! இதில் கிளியோப்பட்ராவைப் பற்றி எப்படிச் சொல்லப்பட்டிருக்கிறது என்று." "கிளியோ அரசகுடும்பத்தில் பிறந்தவள், அரசாளும் உரிமைபெற்றவள். ஆனாலும் மாற்றாரால் அடித்துத் துறத்தப்பட்டாள். அந்த அபலை, ஆதரிப்பார் எவருமின்றி, எகிப்து நாட்டுப் பாலைவனத்தில் அலைந்தாள்.

அரசாளும் உரிமையுடையவள், அனாதை போலிருந்தாள். பளிங்கு மண்டபத்தில், பனிநீர் கொண்டு கழுவிட வேண்டிய பாதங்கள், பாலைவனத்தில் சுடுமணலில் தவித்தன. எழில் மிகு வதனம்—இளமை ததும்பும் முகம் மணற் காற்றுபட்டு சோகமடைந்திருந்தது, அழகிய ஓவியம் புழுதியடைந்திருந்தது.

கடைசியாக அவளுக்கு உதவியாக வந்தது, எகிப்து நாட்டிலிருந்தல்ல, ரோம் நாட்டிலிருந்து. பாலை வனத்தில் நிழல் தேடி அலைந்தவளைப் பாதுகாக்க—எகிப்து நாட்டு அரசு பட்டத்தைத் தவிர ஒருவன் வந்தான். அவன் தான் ஜூலியஸ் சீசர்.

சீசரிடம் படைவலி இருந்தது. கிளியோப்பட்ராவிடம் எகிப்து நாட்டு அரசுக்கு உரிமையிருந்தது. அத்துடன் அவளிடம் அழகு—இளமை, பார்வையிலே கனிவு, பேச்சிலே கவர்ச்சி இருந்தன."

மசிலாமணி பக்கங்களைப் புரட்டிக் கொண்டிருந்தன்.

"மணி! எல்லாம் அப்படியே இருக்கட்டும். வா, போய் நம் வயிற்றைப் பார்த்துக்கொண்டு பின் எகிப்து நாட்டு எழிலரசியிலிருந்து, இந்தக் காலத்து விழியரசிவரை பார்த்துக்கொள்ளலாம்" என்றேன். உண்மையில் எனக்குப் பசி அதிகமாக இருந்தது. அதிலும் சாப்பிடப் போகலாம் என்று தயாராகி நின்று விட்டால், அப்பொழுதுதான் இன்னும் கொஞ்சம் பசி அதிகமாகிவிடும்.

மாசிலாமணி என்னை விடுவதாயில்லை. "அவள் அரசி அதே சமயத்தில் ஒரு பெண்.

அரசுக்குப் பணயமாகத் தன் காதலைத் தந்தாள். கடைசியாக தன் காதலுக்குப் பணயமாக அரசை வைத்தாள்.

அரசும் அழகும், காதலும் வாழ்வும் ஒன்றோடொன்று போட்டியின்றி சிறந்து விளங்கியது, ரோம் வீரன், மார்க்கஸ் ஆண்டனி, அந்த வேல் விழியாளைச் சந்தித்த பொழுதுதான்." படிப்பதை நிறுத்திவிட்டு மாசிலாமணி சிறிது நேரம் என்னைப் பார்த்தான், தான் சொல்லிக் கொடுக்கிற பாடம் மாணவனுக்குப் புரிகிறதா என்று கவனிக்கும் ஆசிரியரைப்போல. நானும் பேசாமல் அவனையேத் திரும்பிப் பார்த்தேன்.

"கிளியோபட்ராவும், ஆண்டனியும் எப்படிச் சந்தித்தார்கள் என்று தெரியுமா?" என்று மாசிலாமணி கேட்டான்.

தெரியாது என்று தலையசைத்தேன், இனிமேல் அவன் சொல்வதையெல்லாம் கேட்டுக்கொண்டிருப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற நிலையில்.

"வெற்றி கண்ட ரோம் படைகள் சூழ்ந்து நிற்க, வீரன் மார்க்கஸ் ஆண்டனி, டார்சஸ் நகரின் சந்தைக்கூடத்தில் கொலு வீற்றிருந்தான், நீதி நிர்வாகங்களைக் கவனிக்க. அந்தி மயங்கும் வேளை. திடீரென்று ஆண்டனி முன்னிருந்த கூட்டத்திலிருந்து மக்கள்—முதலில் சிறுவர்கள், பிறகு பெண்கள், பின் பெரியவர்கள், கடைசியாக ரோம் வீரர்களே அந்த இடத்தைவிட்டுப் போக ஆரம்பித்தனர். இறுதியில் ஆண்டனி மட்டும் தனிமையாக உட்கார்ந்திருந்தான். "எங்கே போகிறீர்கள்?" என அவன் உறுமினான். "காதல் தேவதை வருகிறதாம்!"

என்ன கதையிது என ஆச்சரியமும் கோபமும் கொண்டவனாய், ஆண்டனி மக்கள் மொய்த்துக் கிடந்த ஆற்றங்கரைக்கு வந்தான். அங்கு கூட்ட நெருக்கடியில் கூக்குரல் அதிகரித்தபடி இருந்தது. மக்கள் அங்குமிங்கும் ஓடினர், பாட்டுகள் கிளம்பின, குதிரைகள் மிரண்டு பாய்ந்து சென்றன. வீரர்களின் வாட்கள் ஆங்காங்கு மின்னின, கடைசியாக "அதோ! அதோ!" என்ற குரல் வந்தது. சத்தம் அடங்கியது. ஆண்டனி திரும்பிப் பார்த்தான். அவன் கண்ட காட்சி, அவனைத் திகைப்புறச் செய்தது.

ஆற்றில் ஒரு படகு—உல்லாசப் படகு—முகப்பில் தங்கத்தகடு மின்னிட, மேலே வெண்பட்டு விதானம் ஆடிட, இருபுறத்திலும் வெள்ளித்துடுப்புகள் அசைந்திட, மணிச்சரங்கள் ஊசலாட, மலர்க்கொத்துகள் சிதறிட, படகு நீரிடை தவழ்ந்து வந்தது. அது வருவது பொன் அன்னம் வெள்ளிச் சிறகுகளை அசைத்துக்கொண்டு வருவதைப்போலிருந்தது. துடுப்புகள் அசைவதற்கேற்ப, ஓடத்திலே இசையெழுந்தது. அழகிகள் பலர் சுற்றிலும் ஆடிப்பாடி வந்தனர், வாசனைப்பொடிகளைக் காற்றில் தூவியவண்ணம். ஓடத்தின் மத்தியில், அலங்கரிக்கப்பட்ட தங்கக் கட்டிலில் அமர்ந்திருந்தாள், காதல் தெய்வத்தின் உடையில்—காதல் தெய்வத்தின் உருவத்தில், அழகின் சிரிப்பு, எழிலின் சாயல், வசந்தகாலப் புதுமலர், வானத்து முழுமதி—அவள்தான் எகிப்து நாட்டு இளவரசி—கிளியோபட்ரா.

ஓடத்தைவிட்டு அந்த உல்லாசி இறங்கிவந்தாள். ஆண்டனி அவளைக் கண்டான். அவள் புன்னகை செய்தாள்.

அவளை அடிமைப்படுத்திச் செல்லவந்த வீரன் மார்க்கஸ் ஆண்டனி, இப்பொழுது அவள்முன் அடிமையாக நின்றான்.

புயலெனக் கிளம்பிவந்த புலிநிகர் வீரன், இப்பொழுது அந்தப் பூவையின் புன்னகை முன் செயலிழந்து நின்றான்.

சென்றான், கண்டான், வென்றான் என்று சீசரைப்பற்றிச் சொல்வார்கள். ஆனால் ஆண்டனியோ, சென்றான், கண்டான், வீழ்ந்தான்.

அடிமையும் வீரனும் சந்தித்தார்கள், அடிமை வெற்றிபெற்றாள், வீரன் அடிமைப்பட்டான்."

மாசிலாமணி படித்து நிறுத்தினான். கடிகாரத்தில் மணி ஆறுக்குமேல் காட்டியது. நான் அசையாது உட்கார்ந்திருந்தேன்.

"எப்படி?" என்று மாசிலாமணி கேட்டான்.

"பிரமாதம்!" என்று நான் பதிலளித்தேன். என்னுடைய மனமோ படிக்கவேண்டிய பாடம், இரவல்வாங்கவேண்டிய புத்தகம், ஊரிலிருந்து வரவேண்டிய பணம் இவைகளைப்பற்றி கணக்கிட்டுக்கொண்டிருந்தது.

நல்ல வேளையாக அந்தச் சமயத்தில் வேலைக்கார முனுசாமி வந்து, எனக்கு விடுதலை தந்தான், எகிப்து நாட்டு அரசியிடமிருந்து, ரோம் நாட்டு வீரனிடமிருந்து. "சாமி! உங்களைத் தேடிக்கொண்டு அடையாரிலிருந்து கார் வந்திருக்கு."

"எந்தக் காருடா?"

"அதுதான் சாமி! வெள்ளைக் கார்!"

"சரி, டாக்டர் வீட்டுக்குப் போகணும். அதற்குத் தான் வரச்சொல்லியிருந்தேன். முத்து, நீயும் வாயேன்?" என்று என்னையும்

மாசிலாமணி கூப்பிட்டான். சோம்பல் முறித்துக்கொண்டு இல்லையென்று சொன்னேன்.

“எப்படா எழுந்துபோவான் என்று காத்துக்கொண்டிக்கிறாய்! போ, போய் கரைத்துக் குடி!” என்று மாசிலாமணிபோய்விட்டான். எகிப்து நாட்டுக் காரிகையைக் கைவிட்டு, அடையாரிலிருந்து வந்த காரைத் துணை கொண்டு.

அதற்கப்புறம் ஒருவாரம் வரை மாசிலாமணியை நான் பார்க்கவில்லை. பெரிய வீட்டுப் பிள்ளை எங்கேயாவது சுற்றிக்கொண்டிருப்பான் என்று நினைத்துக்கொண்டேன். ஆனால் ஒரு நாள் மாலை மாசிலாமணியின் அறைப்பக்கம் போகும்பொழுது, கதவு பூட்டப்படாமல் இருந்தது. அந்த நேரத்தில் அவன் தங்கியிருப்பது ஆச்சரியமானதால் அறைக்குள் போனேன். உள்ளே பலமான சத்தம்—மாசிலாமணியின் குரல் என்னை பயமுறுத்தியது.

“போ, ஓடிப்போ! என் முன் நில்லாதே! ரோம் நகரத்திலிருந்து செய்தியாம். டைபர் நதியில் அந்த ரோம் நகரம் அமிழ்ந்துவிடட்டும், சாம்ராஜ்யத்தின் பெரும் தூண்கள் சரிந்துபோகட்டும். உலகம்! வாழ்வு! உலகில் எல்லோரும்தான், மனிதனும், மிருகமும்தான் வாழ்கின்றன. ஆனால், இதைப்போன்ற இளங் காதலர்கள், இணையற்ற ஒரு ஜோடி வாழ்கிறதா?” மாசிலாமணி ஏதேதோ அடுக்கிக்கொண்டே போனான். எனக்கு ஒன்றும் புரியவில்லை. பேசுவதை நிறுத்திக்கொண்டு, “எப்படி சரியாக இருக்கிறதா?” என்று மாசிலாமணி கேட்டான். குழப்பத்துடன் மீண்டும் நான் பார்த்தேன்.

“உனக்குத் தெரியாதா? நமது கல்லூரி ஆண்டுவிழாவில் ஆண்டனி—கிளியோபாட்ரா நாடகம்.”

“அது ஒன்றுதான் குறைவாக இருந்தது”

“அந்த நாடகத்தில்......”

“நீயும் சேர்ந்திருக்கிறாயா?”

“நான்தான் மார்க்கஸ் ஆண்டனியாக நடிக்கப்போகிறேன்” என்று நிமிர்ந்து நின்றான் மாசிலாமணி. “அதற்கான பாடம் ஒப்பித்துக்கொண்டிருக்கையில் நீ வந்துவிட்டாய். இதோ ஒத்திகைக்குப் போகவேண்டும். நாழியாகிவிட்டது, நான் போகிறேன்” என்று புத்தகத்தைத் தூக்கிக்கொண்டு ஓடினான்.

சும்மா இருக்கும்பொழுதே கூத்தடித்துக்கொண்டிருப்பவனுக்கு, இதுமாதிரி ஒரு நாடகம் என்று கிடைத்துவிட்டால் கேட்கவேண்டுமா? ஒரே அமர்க்களந்தான் மற்றவர்கள் படிக்கமுடியாது. இவன் தனது பாடங்களைப் படிக்க ஆரம்பித்தால். எகிப்து, ரோம் நாட்டவரின் நடையுடை பாவனைகளை அப்படியே தத்ரூபமாகக் காண்பிக்க வேண்டுமென்று, மாசிலாமணியும் மற்றவர்களும் பாடுபட்டனர். எங்கள் கல்லூரி நூல்நிலையத்தில் புழுதி படிந்துகிடந்த எகிப்து, ரோம் வரலாற்றுப் புத்தகங்கள் திடீரென்று மேஜைமேல் குவிக்கப்பட்டன. புதைபொருள் ஆராய்ச்சிகள், புளூடார்ச் கதைகள், ஷேக்ஸ்பியர் நாடக விமரிசனங்கள் எல்லாம் புரட்டப்பட்டன. இரவு மணி எட்டு ஆகிவிட்டால் போதும், நாடக ஒத்திகையை அவர்கள் ஆரம்பித்துவிடுவார்கள். ரோம், எகிப்து நாடுகளில் சண்டைகள் நிகழ்ந்தனவோ என்னவோ, இவர்கள் போடுகிற சத்தத்தைப் பார்த்தால், ஏதோ பெரிய சண்டை இப்பொழுது நடைபெறுகிறது என்றுதான் தோன்றும். நாடகத்திற்கான காரியங்களனைத்தையும் மாசிலாமணி தன் தலைமேல் போட்டுக்கொண்டு செய்தான், ஓய்வு ஒழிவின்றி. இவ்வளவு பொறுப்புடன் அவன் எதையும் செய்வான் என்று யாரும் எதிர்பார்த்திருக்க முடியாது. முதலில் நாங்கள் அலட்சியமாயிருந்தபோதிலும், பின் வரவர அவர்கள் செய்யும் பலமான முயற்சிகள் கண்டு, அந்த நாடகத்தைப் பற்றிய கவனமும், ஆவலும் அதிகரித்தன. நாடக தினத்தை மிகவும் குதூகலத்துடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்தோம்.

அந்த நன்னாளும் வந்தது. நல்ல இடம் பிடித்துக்கொள்ள வேண்டுமென்பதற்காக சற்று முன்பாகவே கிளம்பிப்போனேன், மாசிலாமணியின் அப்பாவையும், அம்மாவையும் அழைத்துக்கொண்டு—பிள்ளை நாடகத்தில் நடிக்கப்போகிறான் என்பதைக் கேள்விப்பட்டு அவர்களும் வந்திருந்தனர்.

(அடுத்த இதழில் முடியும்)

Regd. No. M 6296

"மன்றம்" வெளியீடுகள்

★ ★ ★

கண்ணீரும் செந்நீரும் வளர்த்த கழகம்

—இரா. நெடுஞ்செழியன் M. A. விலை ரூ. 0—12—0

ராஜாதி ராஜா!

இரா. செழியன் M. A. விலை ரூ. 0—12—0

பொது அறிவு

—இரா. செழியன் M. A. விலை ரூ. 0—8—0

மறைந்த திராவிடம்

—இரா. நெடுஞ்செழியன் M. A. விலை ரூ 0–3–0

- ரூ. 10-க்குமேல் வாங்குவோர்க்கே விற்பனைக் கழிவு.
- விற்பனைக் கழிவு 25 சதவிகிதம்.
- முன்பணம் அனுப்புவோர்க்கே புத்தக அஞ்சலில் அனுப்பிவைக்கப்பெறும்.
- வி. பி. யில் வேண்டுவோர் வி. பி. கட்டணம் தனியே செலுத்தவேண்டும்.

விவரங்கட்கு :— நிர்வாகி, "மன்றம்"
26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1.

"மன்றம்" விற்பனையாளர்கள் தேவை

கீழ்க்கண்ட ஊர்களில் மன்றம் இதழுக்கு முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் தேவை.

செங்கற்பட்டு
காரைக்கால்
விருதுநகர்
கோவில்பட்டி
சங்கரன்கோவில்
சீர்காழி
அம்பாசமுத்திரம்
திண்டுக்கல்
கோபிச்செட்டிப்பாளையம்
கோலார்தங்கவயல்
ஏரல்
அம்மையப்பன்
பண்ருட்டி

மற்றும் விற்பனையாளர் இல்லாத ஊர்களிலும் விற்பனையாளர் தேவை.

விபரங்களுக்கு :

நிர்வாகி,
'மன்றம்'
26, நைனியப்பன் தெரு, மண்ணடி,
சென்னை-1.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A., at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1